Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 20+8
விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 218

ஞாயிற்றுக்கிழமை 02 ஜுலை 2023

ஆனி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

ஈ.பி.எப்., ஈ.ரி.எப். மீது பலவந்தமாக கைவைப்பு
அரசாங்கத்தை சாடும் ஜே.வி.பி. பக்.19

25 இலட்சம் பேருக்கு அநீதி இழைப்பு
சாடுகிறார் நிதிக் குழு தலைவர் ஹர்ஷ பக்.18

செல்வந்தர்களுக்கு சலுகை தொழிலாளர்களுக்கு ஆப்பு!
உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு இதுதான் என்கிறார் சஜித் பக்.03

நேர்மையாக ஆட்சி செய்தாலேயே மக்கள் அர்ப்பணிப்போடு இருப்பர்!
கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு பக்.17

# ஈ.பி.எப்., ஈ.ரி.எப். ஊடாகவே உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு

## நாடாளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேற்றம்
## தமிழ் அரசு, முன்னணி எதிர்த்து வாக்களிப்பு

கொழும்பு, ஜுலை 2

ஊழியர் சேமலாப நிதியம் (ஈ.பி.எப்.) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈ.ரி.எப்.) ஊடாக உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்படும் அரசாங்கத்தின் யோசனை நாடாளுமன்றத்தில் 60 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. »19

## ஊடகங்களுடன் சரியான தொடர்பை பொலிஸார் பேணுவது அவசியம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜுலை 2



பொலிஸார் பொதுமக்களுடன் சரியான தொடர்புகளை பேணிக்கொண்டால் கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள முடியும். பொலிஸார் ஊடகங்களுடன் சரியான முறையில் தொடர்புகளை வைத்திருந்தால் மக்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படாமல் செயற்படமுடியும் -இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். »20

## பெண்ணுடன் சேட்டை விட்டவரின் உடைகளைக் களைந்து தாக்குதல்!

### சந்தேகத்தில் 4 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 2

பழக்கடை வியாபாரியைக் கட்டத்திச் சென்று உடைகளைக் களைந்து தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் »19

## அநாகரிகமாகச் செயற்பட்டால் வியாபாரிகள் மீது நடவடிக்கை

### பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 2

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வீதியோர பழக்கடை வியாபாரிகள் சிலர் பெண்களுடன் முறை தவறிப் பேசுகின்றனர் என்று பல்வேறு »19

## நயினாதீவு அம்மனுக்கு இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 2

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை »04

## மடு அன்னைக்கு இன்று திருவிழா!

மன்னார், ஜுலை 2

மன்னார் மருதமடு அன்னையின் 'ஆடித்திருவிழா' இன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் »04

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு



யாழ்., ஜுலை 2

வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது. இதனால் இன்று »19

## சிகரெட், மதுபானம் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜுலை 2

சிகரெட் மற்றும் மதுபானம் என்பவற்றின் விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வற் வரி அதிகரிப்பு காரணமாக 750 மில்லி. மதுபான போத்தல் ஒன்றின் விலை 300 ரூபாவாலும், »19

### தனியார் கல்வி நிறுவனங்களுக்கு

## வெள்ளி, ஞாயிறு விடுமுறை இன்று முதல் நடைமுறை

### பிரதேச செயலர்கள் கண்காணிப்பர் என்கிறார் மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், ஜுலை 2

யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதிலும் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தரம் 9 வரையான மாணவர்களுக்கு இன்று விடுமுறை வழங்கவேண்டும். »19

## பாடசாலைச் சூழல்களில் ஒருவழிப் போக்குவரத்து

### யாழ்ப்பாண ஆரோக்கிய நகரத்திட்டத்தில் நடைமுறை என்கிறார் மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், ஜுலை 2

பாடசாலை நேரங்களில், யாழ்ப்பாண நகர்ப்புறத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் சூழவுள்ள பகுதிகளுடான போக்குவரத்து ஒருவழியானதாக மாற்றப்படும் - இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் »19

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 61 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

## நிலப்பரப்பு

- ✔ நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோயில் வீதியில்.
- ✔ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✔ 4 பரப்புடன் 5 அறைகள், 3 கோல், இணைந்த குளியலறை அடங்கிய பெரிய வீடும் உள்ளது.
- ✔ குடிதண்ணீர் கட்டுக் கிணறும் உள்ளது.
- ✔ 3 வருடம் பூர்த்தி அடைந்த தென்னைகளும் உள்ளன.
- ✔ நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 1 km தூரம்.
- ✔ 1 பரப்பின் விலை 1200000/= (பன்னிரண்டு இலட்சம்)

**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணிவரை.




## தொடர்புகளுக்கு :- ஜெயம்

**077 81 47 389**

**077 98 65 457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வந்தர்களுக்கு சலுகை தொழிலாளர்களுக்கு ஆப்பு!

## உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு இதுதான் என்கிறார் சஜித்



கொழும்பு, ஜூலை 2

அரசாங்கம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் மூலம் தனவந்தர்களுக்கு சலுகைகளை வழங்கி தொழிலாளர்களின் வைப்பில் கைவைக்க முயற்சிக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதாக இருந்தால் அனைத்துத் தரப்பினருக்கும் ஒரேமாதிரியான சலுகை வழங்கவேண்டும்- இவ்வாறு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேசியக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் தொடர்ந்து தெரிவித்து வந்தனர். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் கை வைப்பதில்லை என்றே தெரிவித்து வந்தனர். நாட்டின் பொருளாதார நெருக்கடியைப் போக்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லுமாறு நாங்கள் தெரிவித்தோம். அது சரி என இன்றும் தெரிவிக்கிறோம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் பிழை. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளுமாறு நாணய நிதியம் தெரிவிக்கவில்லை. அரசாங்கத்தின் தேவைக்கே இது செய்யப்படுகிறது. அரசாங்கம் குறுகிய காலத்தில் நாட்டின் ஆரம்ப நிலுவையை மறை 7 இல் இருந்து நேர்ப் பெறுமானம் 2.3 வரை கொண்டுவருவதே அரசாங்கத்தின் முயற்சியாகும். இது செய்ய முடியுமானதா எனக் கேட்கிறேன். யதார்த்தமான தீர்மானம் அல்ல. மக்கள் மீது பெரும் சுமையை ஏற்டுத்தியே அரசாங்கம் இதனை மேற்கொள்ளப்போகிறது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளாமல் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்கு வந்த பல நாடுகள் இருக்கின்றன. அதனால் எமது அரசாங்கத்தில் இந்த நிபந்தனைகளை இலகுபடுத்திக்கொள்ள நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவோம் - என்றார். (அ-ஒ.இ)










உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க நிதிக்குழுவின் நிபந்தனை புறக்கணிப்பு

## நாடாளுமன்றில் கடும் கண்டனம்

**கொழும்பு, ஜூலை 2**

**தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் அமைச்சரவைக்கு வழங்கிய தெளிவுபடுத்தல், தேசிய கடன் மறுசீரமைப்பு கொள்கைத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவேண்டும் என அரசாங்க நிதி தொடர்பான குழு முன்வைத்த நிபந்தனை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்படாமைக்கு அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 148 ஆவது பிரிவின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிதி தொடர்பான பிரேரணை தொடர்பில் தெளிவான அறிக்கை சமர்ப்பிப்பது அரசாங்க நிதி தொடர்பான குழுவின் பொறுப்பாகும். அரசாங்க நிதி தொடர்பான குழுத் தலைவராக பதவி வகிப்பதால் விசேட வரப்பிரசாதங்கள் கிடைக்கின்றது என்று ஒரு தரப்பினர் கருதுகிறார்கள். உண்மையில் எந்த வரப்பிரசாதங்களும் கிடைப்பதில்லை. நாட்டுக்காக சுய விருப்பத்துடன் குழுவில் சேவையாற்றுகிறோம்.

தேசிய கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் கடந்த இரண்டு நாள்களாக அரசாங்க நிதி தொடர்பான குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. முதல் நாள் கலந்துரையாடலில் மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இரண்டாம் நாள் கலந்துரையாடலில் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதானிகள் கலந்து கொண்டனர்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில்குழுஊடாகஇறுதித்தீர்மானத்தை எடுக்கமுடியாத காரணத்தால் வாக்கெடுப்புக்குச் செல்லத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய குழுவில் பெரும்பாலான தரப்பினர் தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததால் செயற்றிட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது. மத்திய வங்கியின் ஆலோசனைக்கு அமைய மத்திய வங்கி தயார்ப்படுத்திய செயற்றிட்ட அறிக்கை, ஜனாதிபதி தலைமையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் ஆற்றிய தெளிவுபடுத்தல் தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்துக்குள் நேரடியாக உள்வாங்கப்படவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. நிபந்தனைகளின் அடிப்படையில் தான் குழு அனுமதி வழங்கியது. செயற்றிட்ட கொள்கைத் திட்ட அறிக்கைக்கும், நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தின் தினப் பணிகளின் அறிவித்தலுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது. மத்திய வங்கி ஆளுநர் ஆற்றிய தெளிவுபடுத்தலை நேரடியாக உள்ளடக்கப்படவேண்டும் என அரசாங்க நிதி தொடர்பான குழு வழங்கிய நிபந்தனை கவனத்தில்கொள்ளப்படவில்லை. இது முற்றிலும் தவறானது - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சரின் உரையின் போது அந்த விடயங்கள் திருத்தம் செய்யப்படும் - என்றார்.

அப்போது குறுக்கிட்ட ஹர்ஷ டி சில்வா, நிதி இராஜாங்க அமைச்சரவையின் உரையின்போது திருத்தம் செய்யப்படும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. விவாதத்தை ஆரம்பிக்க முன்னர் திருத்தம் செய்யப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

அதையடுத்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா முன்வைத்த நிபந்தனைக்கு அமைய தேசிய கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் அமைச்சரவைக்கு ஆற்றிய தெளிவுபடுத்தல் செயற்றிட்ட அறிக்கைக்குள் நேரடியாக உள்வாங்கப்படும் இதைத் திருத்தமாக அறிவிக்கிறோம் - என்றார்.

(எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். அந்நியோன்யம் அதிகரிக்கும். கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் நிறைவேறும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

## நயினாதீவு...

காலை 9 மணியளவில் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது. காலை 7 மணியளவில் வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று காலை 8.30 மணியளவில் நாகபூஷணி அம்மன் சித்திரத் தேரில் ஆரோகணிப்பார். மாலை 4 மணியளவில் பச்சை சாத்தி சித்திரத் தேரிலிருந்து நாகபூஷணி அம்மன் அவரோகணம் செய்யும் திருக்காட்சி இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 6.15 மணியளவில்வசந்தமண்டபப்பூசையும், காலை 7 மணியளவில் நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து தீர்த்தமாடப் புறப்பட்டு நண்பகல் 12 மணியளவில் கங்காதரணியில் தீர்த்தோற்சவமும், நாளை நள்ளிரவு 12 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (அ-ஓ,66)

## மடு...

இம்மனுவல் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெறவுள்ளது. இன்று காலை இரு மொழிகளிலும் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், மடு அன்னையின் புகழ்பெற்ற தேர்ப்பவனி இடம்பெறும். திருவிழாவுக்காக பல்லாயிரம் மக்கள் மடுத் தேவாலயத்தில்கடந்தசிலநாள்களாகமுகாமிட்டுள்ளனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் அதிகளவான பக்தர்கள் வருகை தந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)



மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சமுதாயப் பணி, பக்திநெறி 2023 ஆம் ஆண்டுக்கான ஆன்மீக மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, ஏற்பாட்டாளரான சுவிஸைச் சேர்ந்த சுரேஷ், கனடா வாழ் சமூகச் செயற்பாட்டாளர்கள் கேன் கிருபா, சோம சச்சிதானந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஓ,125)

# குறைந்தது பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, ஜூன் மாதத்தில் பணவீக்கம் 12 சதவீதமாகக் குறைந்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, மே மாதத்தில் பணவீக்கம் 25.2 சதவீதமாகப் பதிவாகியிருந்தது. இது தற்போது 12 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதேவேளை, மே மாதத்தில் 21.5 சதவீதமாக இருந்த உணவுப் பொருள்களின் பணவீக்கம் ஜூன் மாதத்தில் 4.1 சதவீதமாக கணிசமாகக் குறைந்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மைத்திரி காலத்தில் மறக்கப்பட்டிருந்த '13'

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக்கு தான் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது வலியுறுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன. சுதந்திரக் கட்சி தற்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லையாயினும் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதை தாம் எதிர்க்கப்போவதில்லை என்றும் – 13ஆவது திருத்தம் நாட்டின் அரசமைப்பில் உள்ள நிலையில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான அத்தனை முயற்சிகளையும் எடுக்கவேண்டிய அரசாங்கத்தின் கடமை என்றும் அவர் தனதும் சுதந்திரக் கட்சியினதும் நிலைப்பாட்டை அழுத்தம் திருத்தமாக்கியிருக்கின்றார்.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவோ – அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கான துருப்பாகவோ 13ஆவது திருத்தம் அமையப்போவதில்லை. இது காலம் காலமாக தமிழர்கள் வலியுறுத்திவரும் விடயம்தான். ஆனால், ஒரு தீர்வாக அல்லாமல் தீர்வுக்கான 'ஆரம்பப் புள்ளியாக' 13ஆவது திருத்தத்தைப் பரிசீலிப்பதில் தவறில்லை. இந்தத் தெளிதலை – நிலைப்பாட்டை இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுவிடுதலே தகும்.

விடயம் என்னவென்றால், 13ஆவது திருத்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வாக இன்றோ நேற்றோ முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல. இலங்கையின் இனப்பிரச்சினைக்குள் மேற்கொள்ளப்பட்ட இந்தியத் தலையீட்டின் விளைவாக 1987ஆம் ஆண்டிலேயே அரசமைப்புக்குள் அந்தத் திருத்தம் புகுத்தப்பட்டுவிட்டது. இதன்படி சுமார் மூன்றரைத் தசாப்தத்துக்கும் மேலாக (சரியாக 36 ஆண்டுகள்) இலங்கையின் இனப்பிரச்சினையுடன் இணைந்த வகையில் 'பதின்மூன்றும்' பந்தாடப்பட்டுத்தான் வருகின்றது. இந்த நீண்ட – நெடிய வரலாற்றில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு உரியவராக மைத்திரிபால சிறிசேன எத்தனையோ தடவைகள் இருந்திருக்கின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக, 2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்பி தமிழர்களினதும் இதர சிறுபான்மை மக்களினதும் பேராதரவுடன் ஜனாதிபதியாக ஆட்சிப்பீடம் ஏறியபோது இந்தத் திருத்தத்தை நிறைவேற்றி தமிழர்களுக்கு ஒரு தீர்வைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு மைத்திரிக்கு முழுமையாக இருந்தது. ஆனால், அதற்குரிய முனைப்பு கிஞ்சித்தும் இல்லாதவராகவே மைத்திரி செயற்பட்டார். இதுவே வரலாறு.


அரசமைப்பில் அனுமதிக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இன்று வலியுறுத்தும் மைத்திரி, தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஏன் அதை நடைமுறைப்படுத்தவில்லை? என்ற கேள்விக்கு அவரிடம் என்ன பதில் இருந்துவிடப்போகின்றது? இத்தனைக்கும் மைத்திரியை ஆட்சிப்பீடம் ஏற்றியது தமிழர்களே. தமிழர்களின் வாக்குகளால்தான் நான் ஜனாதிபதியானேன். தமிழர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டவனாயுள்ளேன் என்று ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் தாயகத்திலும் கொழும்பிலும் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட மைத்திரி, 'பதில் நன்றிக்கடனாக' தமிழர்களுக்கு ஆற்றிய காரியங்கள் எவை? 13ஆவது திருத்தம் தொடர்பிலோ அல்லது தமிழர்களுக்கான தீர்வு தொடர்பிலோ விவாதிப்பதற்கும் விசனிப்பதற்கும் குறைந்தபட்சத் தார்மீக உரிமைகூட மைத்திரிக்கு இல்லை, அதுவே உண்மை.

யாழ்ப்பாணத்துக்குத் தான் மேற்கொண்ட பயணத்தில் விளை நிலங்களுக்கும், விற்பனை நிலையங்களுக்கும், நாற்சந்திகளுக்கும், உணவகங்களுக்கும் சென்று மக்களுடன் மக்களாகச் உறவாடுவதான மாயையை ஏற்படுத்தும் 'இந்திய அரசியல் கலாசாரத்தை' பிரதியெடுக்கும் மைத்திரி, ஒரு விடயத்தை நன்கு உய்த்துணர்ந்துகொள்ளவேண்டும். தமிழர்களுக்கு அவர் 'புறமுதுகு காட்டிச் செய்த நன்றிக்கடனை' தமிழர்கள் இன்றளவும் மறக்கவேயில்லை.

## நாளொரு நல்வார்த்தை

"கல்வியின் நோக்கம் வெறுமையான மனதைத் திறந்த மனதாக மாற்றுவதாகும்"

– மல்கம் ஃபோர்ப்ஸ்




# உணவுப் பஞ்சத்தால் 10,000 பேர் பாதிப்பு!

## உலக உணவுத்திட்டம் அறிக்கை

**கொழும்பு, ஜூலை 2**

**இலங்கையில் கடந்த மே மாதம் மட்டும், 10 ஆயிரம் பேர் தீவிர உணவுப் பாதுகாப்பின்மையை (பஞ்ச நிலை) எதிர்கொண்டுள்ளனர் என்று உலக உணவுத்திட்டம் அறிக்கையிட்டுள்ளது.**


WFP

இது தொடர்பில் உலக உணவுத்திட்டம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில், 3.9 மில்லியன் மக்கள் இவ்வாண்டு மே மாதத்தில் பகுதியளவிலான உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகம் கொடுத்துள்ளனர். அதேவேளை 10 ஆயிரம் பேர் தீவிர உணவுப் பாதுகாப்பின்மைக்கு ஆளாகியுள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம் 6.2 மில்லியன் மக்கள் பகுதியளவிலான உணவுப்பாதுகாப்பின்மைக்கும், 66 ஆயிரம் பேர் தீவிர உணவுப்பாதுகாப்பின்மைக்கும் முகங்கொடுத்திருந்தனர். அதனுடன் ஒப்பிடுகையில் நிலைவரம் முன்னேற்றமடைந்துள்ளது.

பெருந்தோட்டப்பகுதிகளிலேயே உணவுப்பாதுகாப்பின்மை வீதம் உயர்வாகப் பதிவாகியுள்ளது. அங்குள்ள குடும்பங்கள் பல பிரதான வருமானத்துக்கு சமுர்த்தி, விசேட தேவையுடையோருக்கான உதவிக்கொடுப்பனவு போன்ற சமூகப்பாதுகாப்பு உதவித்திட்டங்களிலேயே தங்கியுள்ளன. அதேபோன்று, தமது உணவுத்தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக வாழ்வாதார அடிப்படையில் பல்வேறு மாற்றுவழிகளைக் கையாளும் குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு மேமாதம் 48 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது இந்த வருடம் மார்ச் மாதத்தில் 62 சதவீதமாக உயர்வடைந்துள்ளது - என்றுள்ளது. (ச-இ)

## அரைச்சொகுசுப் பேருந்துகளின் அனுமதி இரத்துக்குத் தடை!



அனைத்து மாகாணங்களுக்குமான அரைச்சொகுசுப் பேருந்துச் சேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ள 430 அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

அனைத்து மாகாண தனியார் பேருந்து சங்கம் தாக்கல் செய்துள்ள மனு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டது. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்தது. (ம)

## தாவரவியல் பூங்காக்களின் நுழைவுக்கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜூலை 2

நாட்டிலுள்ள தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுக் கட்டணம் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தாவரவியல் பூங்காவுக்குள் நுழைய வேண்டுமாயின், பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அனுமதிக் கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

**03.07.2023**

திங்கட்கிழமை

ஆனி 18

சுபநேரம் : 11.57 - 01.27

ராகுகாலம் : 07.27 - 08.57

**பூரணை விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தலையீட்டைக் களைந்தாலே சமுர்த்தியில் மக்கள் பயனடைவர்!

## யாழ். மாவட்ட முன்னாள் சமுர்த்திப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 2

**சமுர்த்தித் திட்டமானது அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபட்டு மக்கள் நலன்சார்ந்து முன்னெடுக்கின்றபோது அந்தத் திட்டம் தனது முழுமையான நோக்கத்தில் முழுமை பெறும் என யாழ். மாவட்ட முன்னாள் சமுர்த்திப் பணிப்பாளர் கந்தையா மகேஸ்வரன் தெரிவித்தார்.**

சமுர்த்திப் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கருத்தமர்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமுர்த்திக் கொடுப்பனவானது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும் 3 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு 3 ஆயிரத்து 200 ரூபாவும் வலுவூட்டல் குடும்பத்துக்கு 420 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் குறிக்கப்பட்ட கட்டாயகழிப்புச்செய்யப்பட்டுசேமிப்பு முன்னெடுக்கப்பட்டு அது அவர்கள் சமுர்த்தியிலிருந்து நீங்குகின்றபோது ஒரு தொகையாக வழங்கப்படும்.

ஒரு பயனாளியைத் தெரிவு செய்யும் பொழுது குடும்பக் கல்வி நிலைமை, அடிப்படை சுகாதார நிலை, பொருளாதார நிலை, சொத்து நிலை, குடியிருப்பு நிலைமை, தங்கி வாழ்வோரின் தொகை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு பயனாளி தெரிவு இடம்பெறுகின்றது.

ஆனால் எமது அதிகாரிகள் உரிய முறையில் தெரிவு செய்கிறார்களா என்றால் இல்லையென்றே கூறவேண்டும்.

உண்மையில் சமுர்த்திச் செயற்றிட்டம் சிறந்த திட்டங்களினுள் ஒன்றாகும்.

தற்போதுள்ள மிகப்பெரிய பிரச்சினை யாதெனில் எங்களுடைய மக்கள் பொருளாதாரரீதியில் வசதியாக இருந்தாலும் சமுர்த்திக் கொடுப்பனவை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. அதனால் பொருளாதாரம் குன்றிய மக்களுக்கு இந்தத் திட்டம் சென்றடைவதில்லை.

இங்கே அரசியல் நியமனங்களிலேயே அதிகளவான உத்தியோகத்தர்கள் சமுர்த்தியினுள் காணப்படுகின்றனர். தெரிவுகளும் தவறாக இடம்பெற இதுவே காரணமாகும்.

தற்போது சமுர்த்தி நிதியமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு நலன்புரித் திட்டத்தின் கீழ் மீளாய்வு செய்யப்படுகின்றது. சமுர்த்தித் திட்டமானது அரசியல் தலையீடு இன்றிச் செயற்படும் போதே அந்தத் திட்டம் தனது நோக்கத்தில் முழுமை பெற்று மக்களைச் சென்றடையும் - என்றார். (ச-125)

## மானி. மகளிர் கல்லூரி வைரவிழா நடைபவனி

மானிபாய், ஜுலை 2

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் 60 ஆவது ஆண்டு அகவையை முன்னிட்டு கல்லூரி மாணவர்களின் நடைபவனி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையில் இருந்து ஆரம்பமாகிய நடைபவனி, ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தின் ஊடாக மானிப்பாய் இந்துக்கல்லூரியை அடைந்து பின்னர் கல்லூரியை வந்தடைந்தது.

நடைபவனியில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி3-125)

## ஆர்தர் சி. கிளார்க் நிறுவன ஆளுநர்சபை உறுப்பினராக யாழ். பல்கலை. துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஜுலை 2

கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் கீழ் நிர்வகிக்கப்படும் ஆர்தர் சி.கிளார்க் நவீன தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களில் ஒருவராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜெயந்தவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், உடனடியாகச் செயற்படும் வகையில் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-66)

## நட்சத்திர விழா

யாழ்ப்பாணம், ஜுலை 2

சங்கீத பூஷணம் வி.கே.நடராஜாவை கௌரவிக்கும் 85ஆவது நட்சத்திரவிழாவும் ஒலி, ஒளி பேழை வெளியீடும் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அளவெட்டி கும்பழாவளை திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகம் கலந்து கொள்ளவுள்ளார் என விழாக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ச)



## போதையில் தாக்குதல் பிக்கு கைது!

அநுராதபுரம், ஜுலை 2

மதுபோதையில் குழப்பம் விளைவித்து நபரொருவரை தாக்கிய குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பிக்குவை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து ஒருலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்று உத்தரவிட்டது. (ச-ரி2)

## உயர்ரக மிளகாய்ச் செய்கை வவுனியாவில் வயல் விழா!

வவுனியா, ஜுலை 2

வவுனியாவில் உயர்ரக மிளாகாய்ச் செய்கை தொடர்பான வயல்விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சமளங்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழுள்ள தெற்கிலுப்பைக்குள பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. சமளங்குளம் விவசாய போதனாசிரியர் கே. காயத்திரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பி.அற்புதசந்திரன், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதன்போது எம்.ஐ.சி.ஏச். உயர்ரக மிளகாய்ச் செய்கையால் கிடைக்கக்கூடிய பயன்கள், குறைந்த செலவில் அதிக இலாபத்தை ஈட்டும் வழிமுறைகள் தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டன. இதேவேளை வவுனியாவில் 'ஐ.எல்.லோ. லீட்' திட்டத்தின் கீழ் 'எம்.ஐ.சி.ஏச்.' உயர்ரக மிளகாய் விதை பயிர்ச்செய்கையில் 500 விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-110)





## கைதடி வைத்தியசாலை பொன்விழா நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஜுலை 2

கைதடி சித்த வைத்தியசாலையின் பொன்விழா நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.

வெளிநோயாளர் பிரிவு பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி தம்பிராஜா திலீபன் தலைமையில் வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் பி.தயானந்தாவும், ஆயுள்வேத திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் சி.அத்துல மற்றும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் திருமதி.கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்கேற்றனர். (ச-ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி-
வெளிப்புற மோட்டார் விற்பனைகள்
(Outboard Motors - OBM)

YAMAHA

AMW நிறுவனத்தில் நீங்கள் எந்தப் பங்கை வகித்தாலும் இங்கு இரு வெவ்வேறு நாட்கள் ஒரே மாதிரியாக இருக்காது. எமது பணிகளானவை, மாற்றத்தை வேண்டி நிற்கின்ற அபிலாஷைகளினால் இயக்கப்படுவதுடன், அன்றாட வாழ்வின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான அர்த்தமுடைய தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. ஈடுபாடுடையதும், பக்க பலத்தைக் கொண்டதுமான எமது வேலைச் சூழலில் வாய்ப்புப்பெற்று அதனை நிறுவனக் கலாசாரத்தினை பின்பற்றி இரட்டிப்பாக்குவதன் மூலமாக உங்கள் தொழிலுக்குரிய நியாயமான அங்கீகாரத்தையும், வெகுமதியினையும் அடைந்து கொள்ள முடியும். அவ்வாறு எதனை அடைந்து கொள்ள முடியும்? ஒவ்வொரு நாளும் வரையறைகளை கடந்து செல்வதற்கான வாய்ப்பை பெறுவீர்கள்.

74 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கண்ணியம்மிக்க வணிகக் குடும்பமான AMW நிறுவனமானது ஐக்கிய அரபு இராச்சியத்தில் (UAE) புகழ் பெற்று விளங்கும் அல் /புட்டைம் குழுமத்தினால் (Al Futtaim Group - AFG) முழு உடைமையாக்கப்பட்ட துணை நிறுவனமாக இலங்கையில் வாகன தொழில் துறையில் முன்னோடி நிறுவனமொன்றாக தற்போது விளங்கி வருகிறது.

**தேவைப்படும் முக்கிய தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் டிப்ளோமா தகைமையைப் பெற்றிருத்தல்.
- ஆகக் குறைந்தது 3 வருட கால விற்பனை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரே தொழில் துறையில் 1 - 2 வருட கால அனுபவத்தைக் கொண்டிருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சிறந்த தொடர்பாடல் மற்றும் பேச்சாற்றல் திறனைக் கொண்டிருத்தல். அழுத்தம்மிக்க சந்தை நிலைமைகளில் செயலாற்றக் கூடிய திறனைக் கொண்டிருத்தல்.
- செல்லுபடியாகும் சாரதி (மோட்டார் சைக்கிள் / வாகனம்) அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல்.
- வட மாகாணப் பகுதிகளில் விற்பனைகளை மேம்படுத்தக்கூடிய ஆளுமையைக் கொண்டிருத்தல்.
- செயலாற்றுகையின் அடிப்படையில் மற்றும் பயன்மிக்க குழுவாக இயங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல்.

**பிரதான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்:**

- மாதாந்த விற்பனை இலக்குகளை திட்டமிடல் மற்றும் நிறைவேற்றுதல்.
- மாதாந்த வேலைக் கள விஜயத்தைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல். முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பராமரித்தல்.
- விற்பனை முகவர்களை முகாமை செய்தல் மற்றும் 3S வலையமைப்பு பங்காளர்களுடன் வர்த்தகக் குறியீடுகளை ஒருங்கிணைத்தல்.
- மீனவச் சமூகத்தினர், தனியார் தொழிநுட்பவியலாளர்கள் மற்றும் நிதி வழங்குனர்களுடன் சுமுகமான உறவைக் கட்டியெழுப்புதல் மற்றும் முறையாக பேணிவரல்.
- வர்த்தகக் குறியீடுகளை ஊக்குவித்தல் மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவை நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- இருப்புக்களை முறையாகப் பராமரித்தல் மற்றும் குறித்த முகவர்கள் / பிரதேசங்களிலிருந்து கடன்களை முறையாக வசூலித்தல்.
- போட்டி வணிகங்களின் வணிக உபாயங்கள் / உற்பத்திகள் மீது அவதானமாக இருத்தல் மற்றும் உயர் மட்ட முகாமையாளர்கள் உபாயத் திட்டங்களை வகுப்பதற்காக மேற்படி சேகரிக்கப்பட்ட தகவல்களை கீழ் மட்ட முகாமையாளர்களுடன் கலந்துரையாடுதல்.

இந்தத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் உங்களுடைய சுய விபரங்களடங்கிய விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

amw.careerswithus@amwltd.com

பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கும் அனுப்ப முடியும்.

skillsads

முகாமையாளர் - ஆட்சேர்ப்பு
அசோஸியேட் மோட்டர்வேஸ் (தனியார்) கம்பனி
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02





INTERNATIONAL FOUNDATION DIPLOMA
AFTER O/L's

START YOUR FOUNDATION AFTER O/L's AND TRANSFER TO AN INTERNATIONAL UNIVERSITY FOR YOUR BACHELOR'S DEGREE

| | | |
|---|---|---|
| BUSINESS | NURSING | PSYCHOLOGY |
| HOSPITALITY | CHILD CARE | LAW |
| MARKETING | EDUCATION | ENGINEERING |
| FINANCE | BIO MEDICAL | IT |
| FASHION | CHEMISTRY | ANIMATION |

TRANSFER TO TOP UNIVERSITIES IN THE WORLD
AUSTRALIA ▪ CANADA ▪ UK ▪ USA ▪ IRELAND ▪ FRANCE ▪ GERMANY
NEW ZEALAND ▪ DUBAI ▪ JAPAN ▪ MALAYSIA ▪ AND MANY MORE

GCE O/L → INTERNATIONAL FOUNDATION → BACHELOR'S DEGREE

CIIHE

Call The Admission Managers Of The Relevent Programmes For More Details:
Health Sciences : 0117 212 600 Psychology : 0117 212 999
Business : 0117 221 726 General : 0117 212 333

www.ciihe.com


## தடுப்பூசியில் ஒவ்வாமை; பெண்ணொருவர் சாவு



கொழும்பு, ஜூலை 2
கம்பஹா ராகம மருத்துவமனையில் வயிற்றுவலிக்கு சிகிச்சைபெற்றுவந்த 23 வயதுடைய தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்குப் போடப்பட்ட தடுப்பூசியால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக அவர் உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது. (ச-இ)






## நலன்புரிசபை இராஜாங்க அமைச்சர் முல்லைத்தீவுக்கு இன்று பயணம்!

முல்லைத்தீவு, ஜூலை 2
வறுமைசுட்டியில் இரண்டாம் இடத்திலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அரசாங்கத்தின் நலன்புரி சபையின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் வருகை தந்து களநிலைவரங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

நாடுதழுவிய ரீதியில் நலன்புரிக்கொடுப்பனவில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. அதேவேளை நலன்புரித் திட்டத்தின் பெயர்ப் பட்டியலில் புறக்கணிக்கப்பட்ட மக்களின் முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் மாவட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் வறுமைச்சுட்டியில் இரண்டாம் இடத்திலுள்ள முல்லைத் தீவுக்கு அரசாங்கத்தின் நலன்புரி சபையின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் இன்று ஞாயிற்றுக்கிழமை வருகை தரவுள்ளார். மாவட்டச் செயலகத்தில் சந்திப்புகளை நடத்தி களநிலைவரங்களை ஆராயவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச- 19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பேரவையே நீதியைக் கொடு!



## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 2

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை எமக்கு நீதியைப்பெற்றுத் தரவேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாண மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் நல்லை ஆதீனம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டக்காரர்கள் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளின் ஒளிப்படங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் மீதோ அதன் பொறிமுறைகள் மீதோ தமக்கு நம்பிக்கை இல்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களை கண்காணிப்பதற்கு அந்தப் பகுதியில் இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-20)

# கொலை வழக்கு: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 2

கொலை வழக்கொன்றில் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபர் வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகாத நிலையில் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதனையடுத்து சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைதுசெய்த பொலிஸார், நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26)

# கூடுதல் பரப்பில் விதைப்பு: மானியத்தில் உரம் மறுப்பு

## குடமுருட்டி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜூலை 2

அனுமதிக்கப்பட்ட அளவை விடவும், கூடுதலான பரப்பில் விதைப்பை மேற்கொண்ட விவசாயிகளுக்கு மானிய உரவகைகள் வழங்கப்படாது என கமக்கார அமைப்பு அறிவித்துள்ளதால் இன்னலை எதிர்நோக்கியுள்ளோம் என பூநகரி குடமுருட்டிக்குள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

சிறுபோக நெற்செய்கையின்போது அயலிலுள்ள வயல்களில், ஓரிரு பரப்புக் காணியிலும் விதைப்புகளை விவசாயிகள் மேற்கொண்டனர். வயல் உறுதியிலுள்ள பரப்பளவை விட கூடுதல் காணியில் சிறுபோக நெல் விதைப்பு மேற்கொண்ட விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்க முடியாதென கமக்கார அமைப்பு மறுத்துள்ளது. அதனால் தனியார் விற்பனை நிலையங்களிலேயே அவற்றை வாங்கிப் பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றனர்.

சிறுபோகத்துக்காக அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலான பரப்புக்களில் விதைப்பை மேற்கொண்டால், உரப் பகிர்வின்போது அனைவருக்கும் உரம் சென்றடையாது என்பதால் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவு நெற்செய்கைக்கே மானியத்தில் உரம் வழங்கப்படும் என்றும் முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதைவிட, தண்ணீரின் இருப்பு உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டே செய்கையின் அளவும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஓரிரு விவசாயிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளை மீறுகின்றமையால் அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர் என்று கடந்த காலங்களில் சுட்டிக்காட்டப்பட்டமையும் கவனிக்கத்தக்கது. (ச-9)

# முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு!

சாவகச்சேரி, ஜூலை 2

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் முதியவர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த செல்லமுத்து செல்வராஜா (வயது -62) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த முதியவர் புற்றுநோய் காரணமாக அவதியுற்று வந்த நிலையில் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாமென பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-9)



# 10 கோடி ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப்பொதிகள் மீட்பு

மன்னார், ஜூலை 2

மன்னார், இலுப்பைக்கடவையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் 92 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று இலங்கைக் கடற்படை தெரிவித்தது. புதர்களுக்குள் 3 சாக்குப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 42 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த 92 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் பெறுமதி சுமார் 10 கோடி ரூபா என்று கூறப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்வரை கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (எ-213)

# உடைமையில் ஹெரோய்ன்: ஐந்து பேர் கைதாகினர்!

உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐந்து பேர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பதில் பொறுப்பதிகாரி பிரதீப் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-26)



# தொலைத்தொடர்புக் கோபுரம் எங்கள் மண்ணில் வேண்டாம்

## ஏழாலை மக்கள் போராட்டம்


ஏழாலை தெற்குப் பகுதியில் தனியார் காணியொன்றில் தொலைத்தொடர்பு நிறுவனமொன்றினால் சுமார் நூறு அடி உயரமான தொலைத்தொடர்புக் கோபுரமொன்று அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வரும் நிலையில், அதற்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் நேற்று சனிக்கிழமை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் தனியார் காணிக்கு அருகில் புளியங்கிணற்றடி வீதியில் ஆரம்பமான கவனவீர்ப்புப் போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக அங்கு முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்து ஏழாலை தெற்கு களபாவோடை அம்மன் வீதி முகப்பு வரை பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் அங்கும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் முற்பகல் 10.30 மணியளவில் தமது போராட்டத்தை நிறைவு செய்தனர்.

மின்காந்த அலைகள் காற்றுக்கு நஞ்சு, மின்னல் தாக்கம் எமக்கு வேண்டாம் உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் நிறைவில், போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவரிடமும் கையெழுத்துச் சேகரிக்கப்பட்டது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நிலநடுக்கம்!



கொழும்பு, ஜூலை 2

இலங்கையின் பல பகுதிகளில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது என்று புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.8 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. கொழும்பு, பத்தரமுல்ல, காலி உட்படப் பல பகுதிகளில் பூகம்பம் உணரப்பட்டுள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு கடலோர பகுதியில் கடலுக்குள் மிகவும் ஆழமான பகுதியில் பூகம்பம் மையம்கொண்டிருந்தது.

எனினும் இதனால் நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றும் புவியியல் ஆய்வு மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-இ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 45ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அறிவித்துள்ளார். (ச-66)

## ஆனி மாதத்துக்கான ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் நூலின் ஆனி மாதத்துக்கான மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சைவப்புலவரும், ஆசிரியருமான க.கைலைநாதன் இதழை வெளியிட்டு வைத்தார். (ச-66)



# தேசியக் கடன் மறுசீரமைப்பு பாதிப்புகளை ஏற்படுத்தாது



### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

**தேசிய கடன் மறுசீரமைப்பால் எவருக்கும் பெரியளவில் பாதிப்பு ஏற்படாது. அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். கடன் மறுசீரமைப்பை தொடர்ந்து பொருளாதார ரீதியில் பெரும் வெற்றி பெறுவோம் இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் எதிர்க் கட்சிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறாததால் அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். வங்கிக் கட்டமைப்பு பாதிக்கப்படும். அதனால் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்குவார்கள் என்றும் எதிர்பார்த்தார்கள். பெரும் பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இருந்து நாடு தற்போது சற்று இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்டன.

தேசியக் கடன் மறுசீரமைப்பின்போது மூன்று பிரதான தடைகள் காணப்பட்டன. 128 சதவீதமாகக் காணப்படும் மொத்தத் தேசியக் கடன்களை 2032 ஆம் ஆண்டு 95 சதவீதமாகக் குறைத்துக் கொள்ளவேண்டும். 34.6 சதவீதமாகக் காணப்படும் மொத்த நிதி தேவைப்பாட்டை 2027ஆம் ஆண்டு 13 சதவீதமாகக் குறைத்துக் கொள்ளவேண்டும். 9.4 சதவீதமாகக் காணப்படும் வெளிநாட்டு சேவை கடன்களை எதிர்வரும் காலப்பகுதிகளில் 4.5 சதவீதமாக நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும். இவைகளே பிரதான தடைகளாக காணப்பட்டன. பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தவிர மாற்றுத்திட்டம் ஏதும் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் 330 மில்லியன் டொலர் கடன் தவணை கிடைத்தவுடன் நாட்டின் கடன் நிலை உறுதிப்படுத்தப்பட்டது. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றின் ஒத்துழைப்புகள் கிடைத்துள்ளன. தேசியக் கடன் மறுசீரமைப்பால் தமது வங்கி வைப்புக்கு பாதிப்பு ஏற்படுமோ என மக்கள் அச்சம் கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தின் தீர்மானங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டதன் பின்னர் மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள் - என்றார். (எ-இ)

## பொலிஸாரைத் தாக்கியோருக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு!

மன்னார், உயிலங்குளம் பகுதியில் குற்றச்செயல் தொடர்பாக பொலிஸார் சந்தேகநபர்களை விசாரணை செய்வதற்காக வீடு தேடிச் சென்றபோது அந்த வீட்டிலிருந்த ஆண்கள், பெண்கள் இணைந்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக கைது செய்யப்பட்ட 10 பேரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் மாவட்ட பதில் நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை மாலை மன்னார் உயிலங்குளம் மதுபான விற்பனை நிலையமொன்றுக்கு அருகில் சிலர் கலவரத்தில் ஈடுபடுவதாக பொதுமக்கள் சிலர் உயிலங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து உயிலங்குளம் பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை செய்தபோது, கலவரத்தில் ஈடுபட்டவர்களை அங்கு நின்றவர்கள் இனம் காட்டியுள்ளனர். இதற்கமைய பொலிஸார் சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கு அவர்களின் வீட்டுக்குச் சென்றிருந்த போது பொலிஸார் மீது வீட்டிலிருந்தவர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஐந்து ஆண்களும் ஐந்து பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ரி.வினோதனிடம், முன்னிலைப்பட்டபோது 10 சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் கட்டளை பிறப்பித்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரிக்கப்பட்ட போது சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. (ம-56)

## தேசியக் கடன் மறுசீரமைப்பில் மக்களை ஏமாற்றுகிறது அரசு

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை தமது இறுதிக் கால சேமிப்பாக கருதும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு தேசியக் கடன் மறுசீரமைப்பு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். அதை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்றுக்கொள்வாரா? தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றியுள்ளது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற தேசியக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் மீதான விவாதத்தின்போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசியக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் நாட்டு மக்களை தவறாக வழிநடத்தியுள்ளது. தேசியக் கடன் ஒருபோதும் மறுசீரமைக்கப்பட மாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் கடந்த காலங்களில் குறிப்பிட்டார். தேசியக் கடன் மறுசீரமைக்கப்படும் என சர்வதேசத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டு மக்களைத் தவறாக வழி நடத்தியமை முற்றிலும் தவறானது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் தமக்கு ஏற்படப் போகும் பாதிப்புத் தொடர்பில் குரல் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

அரசாங்க நிதி தொடர்பான குழுக் கூட்டத்தில் தேசியக் கடன் மறுசீரமைப்புக்குள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன உள்வாங்கப்படும் என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என மத்திய வங்கியின் நாணயசபை உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் சுய விருப்பத்துடன் கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்கு இணக்கம் தெரிவித்தார்கள் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தின் கருத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஐ நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு

## மைத்திரிபால தெரிவிப்பு

இலங்கை அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது அர சாங்கத்தின் பொறுப்பு என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்குச் சென்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என தமிழ்க் கட்சிகள் கோரிக்கை முன்வைக்கின்ற நிலையில் அது அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நாங்கள் அரசாங்கத்தில் இல்லாவிட்டாலும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு வழங்குவோம் - என்றார்.

(எ-27)

පවුල් පුනරුත්ථාපන කේන්ද්‍රය
குடும்ப புனர்வாழ்வு நிலையம்
FAMILY REHABILITATION CENTRE

## Request for Quotation (Rental of Vehicle)

The Family Rehabilitation Centre(FRC) seeks quotations from suitable transport companies/ owners (preferably from North) for the monthly rental of vehicle with or without Driver for our Regional Office in the North.The preferred type of vehicle is Toyota Town Ace or Toyota Dolphin van. FRC is expecting to dry hire and will provide the driver (optional) and fuel. Minor repairs will be carried out by FRC (amount negotiable);any other repairs, regular servicing and annual documen tation needs to be handled by the company/owner. Interested parties can contact us on 0112580166 or email to frcsl@slt.lk to discuss the terms and conditions.

All offers must be clearly marked "Quotation for Rental of Vehicle" on the top left-hand corner of envelop and reach us on or before 14th July, 2023 to the address mentioned below.

**Family Rehabilitation Centre**
**No.296/14, Park Road,**
**Colombo 5**

(CR/40248)AH-1

## விற்பனைக்கு

மார்டீன் வீதியில் காணியும், மூளாயில் கோழிப் பண்ணையும் விற்பனைக்குண்டு.

Contact number : Sarmilin Rajeevan
**077 227 6498**

(CS/51081)AH-1

## துயர் பகிர்கிறோம்



தோற்றம் 09.01.1949 மறைவு 01.07.2023

எமது பிரதேச செயலகத்தின் நயினாதீவு மத்தி - J/35 கிராம அலுவலர் பிரிவின் -பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் தீபன் அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதி விஸ்வலிங்கம்**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்குஎமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## மரண அறிவித்தல்

**கதிர்காமு சந்திரபோஸ்**

(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், வலி. கிழக்கு பிரதேச சபை, முன்னாள் கிளை முகாமையாளர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை)



**தோற்றம்: 18.11.1948**
**மறைவு: 29.06.2023**

சந்நதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், சந்நதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சந்திரபோஸ் அவர்கள் கடந்த (29.06.2023) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், சின்னராசா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணி (கண்டு) அவர்களின் அன்புக் கணவரும், இராஜ் அகன் (இத்தாலி) நிலக்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அற்புதமலர், காந்தமணி, பவளராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான அமுதலிங்கம், சின்னத்துரை மற்றும் பாலசிங்கம், சறோசா, தேவராசா, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்ஷிகா(இத்தாலி) அவர்களின் அன்பு மாமனாரும், காலம்சென்ற கிருஸ்ண பிள்ளை, மற்றும் தேவராசா ஆகியோரின் சகலனும், அகிலேந்தன் (இலங்கை போக்குவரத்து சபை கிளிநொச்சி), உமாளன் (இத்தாலி), தர்ஷனா, சங்கீர்த்தனா ஆகியோரின் பெரிய தந்தையும், சஜீதா (ஆசிரியர்- யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்) ஜீவநாதன், சுவிதா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கீதாலயன் (நைரோபி), லவென்சன், ( கனடா) திபிகா , டிலக்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜிந், பிருந்தாவன், ஆதவன், அக்சரா, தேனுஸ்றிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு பத்தமேனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR/40267)AH-1

## சிறுநீரகம் தேவை

18 வயதுடைய ஆண் ஒருவருக்கு B Positive / O வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

**077 0589 057**
**077 6652 487**

## நிறைவாழ்வு மையம் தையல் ஆசிரியர் தேவை

இணுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள நிறைவாழ்வு மையத்தின் தையல் பயிற்சி நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த தையல் ஆசிரியர் தேவை.

**077 917 7230**

## ஆடிச்செவ்வாய் கடை ஏலம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் **ஆடிச்செவ்வாய் திருவிழாவை** முன்னிட்டு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினால் **கடை ஏலம் எதிர்வரும் (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00** மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் ஏலத்தொகையைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

**- இணைச் செயலாளர் -**

(CS/51075)AH-1

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை - கோண்டாவில்

## 20 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா

**இடம்:**
சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.

**காலம்:**
03.07.2023 காலை 9.30 மணி

**தலைவர்:**
கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

**பிரதம விருந்தினர்:**
பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தம்பதிகள்
(துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்:**
வைத்தியகலாநிதி வை. மனோமோகன் தம்பதிகள்
(அவுஸ்திரேலியா)

**கௌரவ விருந்தினர்**
திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்
(பிரதேச செயலர் - நல்லூர்)

**ஆசியுரை**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (முதல்வர், நல்லை ஆதீனம்)
ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(முதல்வர், சுப்ரமுனிய கோட்டம், கோப்பாய்)

20ஆவது ஆண்டு விழாவில் தாங்கள் யாவரும் பங்குபற்றிச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.

(CS/51085)AH-1

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ். நொதேர்ன் வைத்தியசாலைக்கு அருகாமையில் வீடொன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

076 804 1906, 074 284 9919

## Room வாடகைக்கு

யாழ். சுண்டுக்குளியில் Room வாடகைக்கு உண்டு.

**0777 242 427 , 0777 412 713**

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு அரைக்கும் தொழில் தெரிந்த ஆள்கள் உடன் தேவை. நேரில் வரவும்.

**ஆரணி மில்ஸ்**
**246, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 352 8986**

(CS/51079)AH-1

## WE ARE HIRING

ASTP Tec Pvt Ltd, a well established computer and office automation products supplier and service provider in Northern Province

1. Accountant-Female-Any Knowledge in relevant field (Computer) with degree holder - Salary Negotiable
2. Hardware Technician-Min. 1Yr experience with NVQ Qualified Certificate holder with Motor bike Licence - Salary Negotiable ஆர்வமுடையோர் 5 நாட்களிற்குள் stpjaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

Director
49, 1st Cross Street, Jaffna

STP Your partner in IT solutions

## Vacancy For Lawyer

WE ARE LOOKING FOR A LAWYER FOR OUR LEADING COMPANY PRIVATE LIMITED.
CANDIDATE CAN BE ABLE TO WORK AS A PART TIME OR FULL TIME
SALARY........ NEGOTIABLE

**PLEASE CONTACT: 077 117 0544**
**075 231 1544**

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ். தெல்லிப்பழையில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 400 5023**

## கடை வாடகைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன் உள்ள கடைத்தொகுதியில் கடை உடன் வாடகைக்கு உண்டு. ஸ்ரேசனரி தவிர்ந்த வியாபாரத்திற்கு வழங்கப்படும்.

**074 232 2360**

## மணமகள் தேவை

தாரமிழந்த ஒரு பிள்ளையுடன் வசிக்கும் 48 வயதை உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (சீதனங்கள் எதிர்பார்க்கப்படமாட்டாது)

**075 696 2191, 077 251 3576**

(CS/51084)AH-1

## வேலையாள் ஒருவர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய உணவகம் ஒன்றிற்கு வெயிட்டர் (உணவு பரிமாறுபவர்) தேவை. உணவு தங்குமிடம், சம்பளம் 30,000 - 36,000 வரை வழங்கப்படும்.

**077 735 3402**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேரேறி வருகிறாள் நயினை நாகபூஷணி

நயினை விசு. இராசநாயகம்

வட இலங்கையில் வரலாற்று மகிமையும், வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பெற்ற சப்ததீவுகளில் மணிபல்லவம் எனப்படும் தனிப்பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. அங்கு அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோவில் கொண்டு எழுந்தருளிய பதியே நயினையம்பதியாகும். சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் புவனேஸ்வரி பீடம் என்னும் தனிச்சிறப்பை அன்னையவள் பெற்று விளங்குகிறாள். அம்பிகையின் மூல விக்கிரகத் தோற்றமும் அதன் வரலாறும் இன்னமும் கண்டறிய முடியாத அதிசயமாகவே காணப்படுகிறது.

நயினை நாகபூஷணி அம்மனின் அருளாசி தனிச்சிறப்பானது. தாய்மையுற, மும்மலங்களின் தீமைகள் விட்டகல வழிப்படுத்துவது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ நற்கருமங்களின் பொருள் பேசுவது. நம்பிக்கையோடு வழிபாடு இயற்றும் அடியவர்களது துன்பங்களையும், நோய் நொடிகளையும் நீக்கி அருளும் சக்தியாகவும் குழந்தைப்பேறு இல்லாதோர்க்கு குழந்தைப்பேறு அளிக்கும் மகா சக்தியாகவும் அன்னை நாகபூஷணி அருளாசி புரிகிறாள். ஆலய கிழக்கு வாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரம் கொண்டது. ஆலயத்துக்கு அலை கடல் தாண்டி வரும் அடியவர்களுக்கு பக்தியின் பரவசத்தை மேலும் உவந்தளிக்கின்றது.

**நாகபூஷணி என்ற பெயர் வருவதற்கு என்ன காரணம்?**

நயினாதீவுக்கு அண்மித்ததாக அனலைதீவு என்னும் ஓர் அழகிய தீவு உள்ளது. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் ஒரு சிறிய தீவு காணப்படுகிறது. அங்கு வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் ஒன்று உள்ளது. அந்த ஆலயப்பகுதியில் இருந்து நாகபாம்பு பூக்களைக் கொண்டு வந்து அம்மனைப் பூசித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு நாகம் பூசித்து வந்தமையால் நாகபூஷணி என பெயர் வரக் காரணமாயிற்று.

**பாம்பு சுற்றிய கல் கருடன் கல்**

ஆலயத்தின் வரலாற்றுச் சின்னமாக ஆலயத்தின் வடக்குக் கடற்பகுதியில் இரு கற்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று பாம்பு சுற்றிய கல் எனவும், மற்றைய கல் கருடன் கல் எனவும் அழைக்கப்படுகின்றன. நாக பாம்பு அம்மனுக்கு பூ கொண்டு வந்த வேளை, கருடன் பாம்பை இடை மறித்ததாகவும் பாம்பு கல்லில் சுற்றிக் கொண்டு


(மறுபக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேரேறி....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)





இருந்ததாகவும், கருடன் மற்றைய கல்லில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த சமயம் வியாபார நோக்கத்திற்காக படகு மூலம் அவ்வழியால் சென்ற வணிகச் செட்டியார் இக்காட்சியை நேரில் கண்டு அம்மனை நோக்கி மனமுருகி வழிபாடு செய்ததாகவும் பின்பு கருடன் அவ்விடத்தை விட்டு நீங்கியதாகவும் பின்பு நாகம் பூவைக் கொண்டு சென்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இதன் பின்னரே பாம்பு சுற்றிய கல் எனவும், கருடன் இருந்த கல் எனவும் அவை அழைக்கப்படுகின்றன. ஆலய பெருந்திருவிழாவின்போது, பதினொராம்திருவிழாவன்று இந்தக்கல்லுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. அந்த நேரம் வானத்தில் கருடன் வட்டமிட்டுப் பறப்பதைக் காணலாம்.

**அன்னையின் அருளாசி:**

நயினை நாகபூஷணி நாட்டின் பல பாகங்களிலிருந்து அடியவர்கள் வந்து கூடும் யாத்திரைத் தலமாக விளங்குகிறது. இவ்வாலயத்தில் அடியவர்கள் தங்கி நின்று நாக தோச நிவர்த்தி, ஏனைய பரிகார கிரியைகள் செய்து வருகிறார்கள். பௌர்ணமி தினங்களில் மாதாந்தம் சிறீ சக்கர பூசை இடம்பெற்று வருகிறது. திருமணமான பெண்கள் தாலி பாக்கியம் நிலைத்திடவும், திருமணமாகாத பெண்கள் நல்வரன் வேண்டியும் வழிபாடு இயற்றுகின்றனர். ஆலய காரியாலயத்தில் ஐயாயிரம் ரூபா வைப்பில் இடும் குடும்பத்தினரின் பிறந்தநாள், திருமணநாள், தந்தை - தாய் நினைவுநாள் போன்ற தினங்களில் அவர்களின் பெயரில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருடா வருடம் அவர்களின் முகவரிக்கு வீபூதிப் பிரசாதம் அனுப்பி வைப்பதோடு அன்றையதினம் ஆலயத்தில் அன்னதானம் அடியவர்களுக்கு வழங்கப்பட்டும் வருகிறது. ஆலய நிர்வாகசபையின் இச்சேவை என்றும் போற்றுதற்கு உரியது. ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு அமுதசுரபி அன்னதான சபையினர் இரவு - பகல் அன்னதான சேவையை சிறந்த முறையில் வழங்கிவருகின்றனர். சாரணர் படை, யாத்திரீகர் தொண்டர்சபை, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், கடல் பாதுகாப்புச்சேவை என்பனவும் வழமைபோல தங்களின் சேவையை திறம்பட ஆற்றி வருகின்றன.

**அம்பிகையைப் பணிவோம்:**

இன்றைய தினம் அம்பிகையின் இரதோற்சவ நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு அவள் அருளாசியை நாடுவோம். அம்பிகையின் தேர் வடம் பிடித்தால் மிகப் புண்ணியம் கிட்டும். வடம் பிடித்தவர்கள் அம்பிகையின் இடம் பிடித்தவர்கள் ஆவார்கள். தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தத் திருவிழா அருளலையும் குறிக்கும். எல்லோரும் நயினை நாகபூஷணித் தாய், நல்லன எல்லாம் தந்தருளவும் நல்வாழ்வு என்னும் பேற்றை வழங்கவும் பிரார்த்திப்போம்.




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

# நீர் சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வாக நாங்கள்

## YARL SMART (Pvt) Ltd







No.341 K.K.S Road, Jaffna.
021 430 0044, | 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 11 . 1990



மறைவு 29 . 06 . 2023

### திருமதி கேதீஸ்வரி ஜெயந்தன்

கிளிநொச்சி உதயநகரை பிறப்பிடமாகவும் இந்திராபுரம் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேதீஸ்வரி ஜெயந்தன் கடந்த (29.06.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜெயந்தனின் அன்பு மனைவியும், கேதுசா (பளை/ மத்திய கல்லூரி), நிஷாங்கன், லக்ஸ்மிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ராமச்சந்திரன் ரிஷானா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான வேலு விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்கண்ணு நாகம்மா முத்து லிங்கம் நசீமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக இந்திராபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
குட்டி - 077 6763 409

(CS 25411) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 07 . 1962



மறைவு 12 . 07 . 2022

### அமரர் வடிவேலு பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற – பேணர் (Burner) – சீமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை, உரிமையாளர் – ஜெயசக்தி மருந்தகம் – மருதனார்மடம்)

திதி: 02.07.2023

ஓராண்டு ஓடியும் ஓயவில்லை நினைவலைகள்
கண்ணீர் தான் வற்றியது
காயம் இன்னும் ஆறவில்லை
மறுபிறவி ஒன்றாக எம்மை வந்துசேரும் வரை
இறையடியில் உம் ஆன்மா
ஈடுபெற பிரார்த்தனைகள்

கடந்த 12.07.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்று (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். )

"செல்வவாசா"
நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்
077 191 1062

(CS/51072)AH-1

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை செல்வம்



பிறப்பு:- 22.01.1957
இறப்பு:- 30.06.2023

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வம் கடந்த (30.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னத் தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், அம்பிகாபதியின் ஆருயிர்க் கணவரும், உமையாபதி, பிரதீஸ் (கனடா), தர்மாபதி (கனடா), சர்மிளாபதி (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிவசொரூபன் (பெல்ஜியம்), அபிராமி (கனடா), சந்திரகாசன் (கனடா), குகானந்தன் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் - நல்லூர்), சஜானா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற பரஞ்சோதிதேவி மற்றும் இராசமணி (சுவிஸ்), வசந்தி (கனடா), கண்ணன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசுவாமி , குஞ்சிதபாதம் செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிவின்ஜா, ராகவின்ஜா, விஸ்ணுசெல்வம், உமையாள் செல்வம், ருத்ரா செல்வம், ஆறன்செல்வம், சாகித்தியா, சகானா, சக்திதரன், ஸ்வரலயன், ஸ்வராங்கி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 978 9594, 021 224 1734

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 25 . 11 . 1987



இறப்பு 29 . 06 . 2023

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிக் கொண்டிருந்த தாதிய உத்தியோகத்தர் **மகேஸ்வரன் - மயூரன்** அவர்கள் கடந்த (29.06.2023) வியாழக்கிழமை அகால மரணமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தாதிய சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தாதியர் உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

# முயற்சிகளுக்குத் தடையிட்டால் நாட்டு மக்களுக்கே பாதிப்புகள்!

## சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 2

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிடல்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும்போது, எவ்வித திட்டமிடலும் அற்றவர்கள் அவற்றைக் குழப்ப முயற்சித்தால் அதன் மோசமான பிரதிபலனை நாடும் நாட்டு மக்களுமே அனுபவிப்பர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. [illegible] மேலும் வரி [illegible] முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சிகள் எண்ணினால் அதுகுறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு விளக்கமளிப்பார்.

பணவீக்கம் குறைவடையும்போது வைப்பாளர்கள் அனைவருக்கும் அதன் பயன் கிடைக்கும். வங்குரோத்தடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிடல்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும்போது, எவ்வித திட்டமிடலும் அற்றவர்கள் அவற்றைக் குழப்ப முயற்சித்தால் முழு நாடும் அழிவை நோக்கிச் செல்லும்.

பொருளாதார முன்னேற்றத்துக்கான முயற்சிகளின்போது தேசிய இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டியது அவசியம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுலம், வயது 44, உயரம் 5 அடி 05 அங்குலம், மீனராசி மணமகன். தனியார்துறையில் 15 வருடங்களுக்கு மேல் கொழும்பில் கணினித் துறையில் உயர்பதவியிலுள்ள மணமகனுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தந்தை தேடுகிறார். கொழும்பில் Apartmentக்கு (4B/ R. Semi Luxury) உரித்தாளி. அமையக்கூடிய துணை (வயது 35 - 41), உயர்கல்வித் தகைமை அழகும், நற்குணமும், யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் மட்டும் விரும்பத்தக்கது. துணையின் நிழற்படமும், ஜாதகமும் தரப்படும். (Viber) இலக்கத்துக்கு முதல் தொடர்பின்போது அனுப்பப்பட வேண்டும். கவனத்துக்கு எடுக்கும் பேர் வழிகளுடன் தொடர்பு மேற்கொண்டு தகவல் கோரப்படும். தரகர் வேண்டாம்.

Viber:
**0094 718 198363**
(CS/24967)AH

## வீடு வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். மாணவர்கள் / தொழில்புரிபவர்கள் குழுவாகத் தங்க அல்லது நிறுவன பாவனைக்கு மட்டும் வழங்கப்படும். (CS/51078)AH-1

**075 979 9161/ 077 769 9212**

## POLAND - போலண்ட் STUDENT VISA

UK பல்கலைக்கழக சான்றிதழ்
ஐரோப்பிய நாட்டில் IELTS தேவை இல்லை. (Not Wanted) Show Money தேவை இல்லை.
3 வருடங்களில் போலண்ட் நாட்டில் UK சான்றிதழ் கிடைப்பதால்
UK, ஐரோப்பா நாடுகளில் நீங்களாகவே தொழிலைத் தேடிக் கொள்ளலாம்.

**Call : 077 4920030, 0788 410 403**

## APARTMENT FOR SALE



**வெள்ளவத்தையில்**
தொடர்மாடி மனைகள்
2,3,4 அறைகளைக் கொண்ட வீடுகள் விற்பனைக்குண்டு
**No.26B, IBC Road, Colombo - 06**
Bank loan can be arranged

உங்கள் அழகிய வீட்டினை பெற்றுக்கொள்ள இலகு தவணை முறையில் பணத்தினை செலுத்தும் அரிய சந்தர்ப்பம்

தெகிவளையில் 1300Sqft, 3 Bedroom, Apartment COC, உறுதியுடன் விற்பனைக்குண்டு

**Mob : 077 522 2613**

ROYAL-T CONSTRUCTION ( PVT ) LTD
No.94,2/1, Galle Road, Colombo-06

## திருமண மண்டபம் உடனடி விற்பனைக்கு



யாழ்ப்பாணம் வடமராட்சியில் பிரபல **Hotel** மதுபான அனுமதிப்பத்திரத்துடன் 3 கல்யாண மண்டபம் கொண்டதாக பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.

**Contact : 077 0 232 289**

## பணியாளர் தேவை

தனியார் உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு கணக்காளர், விற்பனையாளர்கள் தேவை. (ஆண்/ பெண்) (CS/51024)AH-1

**070 659 0123**

## மணமகள் தேவை

1995, இந்து (V) பரணி, Accountant, Australia, பதிவு #9373. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401 (cr.40263) (N-1)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY

Applications are hereby invited from qualified persons for following vacancies:

- **Accounts Clerk/Management Assistant**
  - AAT fully/partly qualified
  - Minimum age 23years
  - Salary Negotiable
- **Senior Work Supervisor**
  - NDT(Civil) / NVQ Level 5
  - Age limit preferably 28-35years
  - Salary Negotiable

If you are interested, please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach the below given address before 10" July 2023.

**The Principal**
**St. John's College, Jaffna.**

(cr.40237) (N-1)

## கடை வாடகைக்கு/ குத்தகைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு (மூன்று கோவிலடி) மானிப்பாய் வீதியில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு கடைகள் உடனடி வாடகைக்கு / குத்தகைக்கு. (32"x32")

**077 886 1855**

## Rent

Rooms Available only for Girls. Rooms with attached Bathroom, Near the Jaffna town and Hospital Suitable for. Doctors, Medical Students and Workers Meals also available. (CS/25394)AH-1

**Contact:- 076 313 6818**

## மணமகள் தேவை

1990, இந்து (V) புனர்பூசம். Robotic Engineer, London . பதிவு #9063. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401. (cr.40263) (N-1)

## மணமகன் தேவை

1992, இந்து, பூரட்டாதி, Software Engineer, பருத்தித்துறை, பதிவு #9326. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. அழையுங்கள் 076 664 9401 (cr.40263) (N-1)

# அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் உலகம் முழுவதும் மருத்துவராக பணிபுரிய, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஆவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பு

ஆரம்ப காலத்திலிருந்தே நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்துவதும் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் புனிதமான செயலாகக் கருதப்பட்டு வந்தது. அதனால் இன்றும் மருத்துவத் தொழில் மிகவும் மதிப்புமிக்க கண்ணியமான தொழிலாகவே பார்க்கப்பட்டு வருகிறது. எனவே, உலகெங்கும் உள்ள மருத்துவர்கள் மற்ற தொழில்களுடன் ஒப்பிடும்போது உயர்வாக மதிக்கப்படுவதுடன் அதிக சம்பளம் மற்றும் சலுகைகளைப் பெற்று வருகிறார்கள். மருத்துவர்களுக்கான வேலை வாய்ப்புகள் உலகில் எங்கும் கிடைக்கின்றன. இதனால் அவர்கள் பல இடங்களில் வேலை செய்வதற்கும் உலகின் எந்தப் பகுதிக்கும் இடம்பெயர்வதற்கும் ஏராளமான வாய்ப்புகளை பெற்று கொள்கிறார்கள்.

மேற்கூறிய வெகுமதிகள் மற்றும் சலுகைகள் காரணமாகவும் மருத்துவத்தின் உன்னத மகிமையினாலும், பல மாணவர்கள் சிறு வயதிலிருந்தே மருத்துவப் பள்ளியில் சேர விரும்புகிறார்கள். அத்துடன் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தையை ஒரு நாள் மருத்துவராகப் பார்க்க கனவு காண்கிறார்கள். எனினும் இதற்கு ஒரு பெரிய தடையாக இருப்பது, மருத்துவ பள்ளிக்கான நுழைவு அனுமதி ஆகும். குறிப்பாக அரசு மருத்துவப் பள்ளியில் நுழைவது மிகவும் போட்டி நிறைந்த விடயமாகும், மேலும் 1% மாணவர்கள் மட்டுமே இதில் வெற்றி பெறுகிறார்கள். அத்துடன் தனியார் மருத்துவப் பள்ளி படிப்புகள் மிகவும் கட்டணம் கூடியவை. எனவே பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்ப முடிவதில்லை.


Prof. Anil Gunathilake
Dean - Faculty of Health & Life Sciences

**பேராசிரியர் அனில் குணதிலக,** Head of Faculty of Health and Life Sciences, CIIHE அமெரிக்கா மற்றும் கனடா மருத்துவமனைகளில் மருத்துவப் பயிற்சிக்கான வாய்ப்பு, மருத்துவத்தின் நவீன தேவைகளுக்கு ஏற்றவாறு மருத்துவர்களின் திறன்களை மேம்படுத்தும்.

இலங்கையின் இன்றைய நிலைமையை அவதானிக்கும் போது, சில இலங்கை மாணவர்கள் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள உயர்மட்ட மருத்துவப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகிறார்கள். இந்தப் மருத்துவப் பட்டங்களின் கட்டணங்கள் வருடத்திற்கு 20 மில்லியன் முதல் 26 மில்லியன் இலங்கை ரூபாய் வரை மாறுபடுகிறது. சீனா, ரஷ்யா, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மிகவும் குறைந்த கட்டணங்களில் மருத்துவப் பட்டப்படிப்புகள் உள்ளன. இருப்பினும், அவர்கள் பெறும் கல்வியின் தரம், அவர்கள் பயிற்சி பெற வேண்டிய போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வளர்ந்த நாடுகளில் இந்த பட்டங்களுக்கான அங்கீகாரம் குறித்து பல சிக்கல்கள் உள்ளன. எனவே, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பட்டப்படிப்பைக் கண்டுபிடிப்பது மாணவர்களுக்கு மிகவும் சவாலாக உள்ளது. அவர்களில் பெரும்பாலோர் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஐரோப்பா அல்லது ஆஸ்திரேலியாவுக்கு பணிபுரிய அல்லது குடியேறுவதற்கான எதிர்காலத் திட்டங்களைக் கொண்டிருப்பதால், இந்த நாடுகளில் அவர்களது மருத்துவப் பட்டம் அங்கீகரிக்கப்படுவது இன்றியமையாதது.

குறைந்த கட்டணங்களில் சர்வதேச அளவில் மருத்துவப் பட்டம் பெறுவதற்கான, அங்கீகரிக்கப்பட்ட பாதையின் அவசியத்தைப் புரிந்து கொண்டு, CIIHE ஆனது, இலங்கையில் மருத்துவத்திற்கு முந்தைய கல்வித் திட்டத்தை (Premedicine) வழங்குவதற்கு மதிப்புமிக்க மணிப்பால் கல்வி மருத்துவக் குழுவுடன் (Manipal Education Medical Group) கைகோர்த்துள்ளது.

மணிபால் குழுமம் சர்வதேச ரீதியான மருத்துவக் கல்வியில் சிறந்த நற்பெயரைக் கொண்டுள்ளதுடன் இந்தியா, மலேசியா, துபாய், நேபாளம் மற்றும் ஆன்டிகுவா ஆகிய 5 வெவ்வேறு நாடுகளில் ஐந்து சிறந்த மருத்துவப் பள்ளிகளையும் நடத்துகிறது. அவர்களின் மருத்துவ பட்டம் உலகம் முழுவதும் உரிமம் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான மருத்துவ பட்டதாரிகள் மணிப்பால் மருத்துவப் பள்ளிகளில் பட்டம் பெற்ற பிறகு அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஆசியா ஆகிய நாடுகளில் பணிபுரிகின்றனர்.

CIIHE ஆனது அமெரிக்கன் யுனிவர்சிட்டி ஆப் ஆன்டிகுவாவின் (AUA) மருத்துவ பள்ளியுடன் சிறப்பாக கூட்டு சேர்ந்துள்ளது. மாணவர்கள் அமெரிக்கா, கனடா மற்றும் UK ஆகிய நாடுகளில் தங்களுடைய இன்டர்ன்ஷிப் (குடியிருப்பு) செய்ய வாய்ப்புகளுடன் AUA இல் படிப்பதற்கான பாதையை வழங்கும் நோக்கத்துடன் இந்த திட்டத்தை ஆரம்பித்து உள்ளது. AUA இல் மருத்துவப் பயிற்சி மற்றும் USMLE முடித்தவுடன், மாணவர்கள் அமெரிக்கா, கனடா அல்லது


Mr. Kiran Shenoy
Director - International Strategy & Partnerships

**திரு. கிரோன் ஷெனாய்,** Director of Strategy, CIIHE உலகெங்கும் ஒரு மருத்துவராக வேலை வாய்ப்புகளைப் பெற மாணவர்களுக்கு இக் கல்வித் திட்டம் ஒரு சிறந்த வாய்ப்பு ஆகும்.

ஐக்கிய இராட்சியத்தில் உள்ள உயர்மட்ட மருத்துவமனைகளில் 2 வருடங்கள் தங்கள் மருத்துவ பயிற்சிகளை மேற்கொள்வார்கள். அமெரிக்காவில் மருத்துவப் பட்டம் பெறுவதற்கு மொத்தம் 7 வருடங்கள் ஆகும். இதில் இலங்கை மாணவர்களுக்கான சிறப்பு நன்மை என்னவென்றால், அவர்கள் இலங்கையில் உள்ள CIIHE இல் முன் மருத்துவ பாடங்களை முதல் இரண்டு வருடங்களில் முடிக்க முடியும். கல்விக் கட்டணம், வாழ்க்கைச் செலவு மற்றும் விமானக் கட்டணம் ஆகியவற்றில் ஒவ்வொரு செமஸ்டருக்கும் மில்லியன் கணக்கில் சேமிக்க இது உதவும். இலங்கையில் இரண்டு வருடங்களை முடித்தவுடன், அவர்கள் AUA க்குள் நுழைந்து, அடுத்த 3 ஆண்டுகளுக்கு முன் மருத்துவ பாடங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மருத்துவ உரிமத் தேர்வுக்காக (USMLE) படிப்பார்கள். அதன் பிறகு அவர்கள் அமெரிக்கா, கனடா அல்லது ஐக்கிய இராட்சியம் ஆகிய நாடுகளில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ பயிற்சி பணிகளுக்காக நுழைவார்கள். அமெரிக்கா, கனடா, மற்றும் இங்கிலாந்தில் உள்ள நவீன, உயர்தர மருத்துவமனைகளில் பயில்வதற்கான வாய்ப்பு கிடைப்பதுடன் அவர்களுக்கு மருத்துவப் பயிற்சியில் சிறந்த அறிவையும் திறமையையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக இது அமையும். எனவே உலகின் தலைசிறந்த மருத்துவமனைகளில் அவர்களால் வேலை தேடி பணிபுரிய முடியும். இது இத்திட்டத்தின் தனிச்சிறப்பாகும். பிற நாடுகளில் மருத்துவம் படிக்கும் பலருக்கு இந்த வாய்ப்பு இல்லை.

இந்தப் பாதையின் மூலம் மருத்துவப் பட்டம் பெறும் மாணவர்கள் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் உலகின் மற்ற எல்லா நாடுகளிலும் பயிற்சி பெறத் தகுதி பெறுகின்றனர். எனவே, உலகின் பல்வேறு பகுதிகளில் பணிபுரிவதற்கும், நிரந்தர வதிவிட உரிமையை அல்லது குடியுரிமையை எளிதாகப் பெறுவதற்கு எண்ணும் மருத்துவ பீட மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

இத் திட்டத்தின் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், CIIHE மாணவர்கள் தங்கள் முன் மருத்துவ கல்வியை முடித்திருந்தால், நடுத்தர வர்க்க பெற்றோருக்குக் கூட பட்டப்படிப்பு கட்டணத்தைக் குறைக்கும் வகையில், முழு மருத்துவ கல்வித் திட்டத்திற்கும் மாணவர்களுக்கு 40% மானியம் கிடைக்கும். A/L கட்டாயமில்லை என்பதால், A/L அல்லது O/L முடித்த மாணவர்கள், மேற்கத்திய நாடுகளில் அல்லது அவுஸ்திரேலியாவில் மருத்துவம் மேற்கொள்வதற்கு, மருத்துவத்திற்கு முந்தைய கல்வித் திட்டத்தில் சேரலாம். ஒரு மாணவர் இலங்கைக்கு வந்து இலங்கையில் தங்கள் மருத்துவ உரிம பதிவைப் பெற திட்டமிட்டால் ஒழிய, நீங்கள் O/L முடிவுகளுடன் இந்த கல்வித் திட்டத்தில் நுழையலாம். மேற்கத்திய நாடுகளில் மருத்துவப் படிப்புக்கு தகுதி பெற்ற பலர் அங்கு குடியேறத் திட்டமிட்டுள்ளதால், O/L முடித்த மாணவர்கள் மருத்துவப் பட்டத்திற்கான பாதையைத் தொடங்க இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். அவர்கள் இலங்கை மருத்துவ உரிம பதிவு பற்றி கவலைப்பட தேவை இல்லை.
இலங்கையில் மருத்துவத்திற்கு முந்தைய கல்வித் திட்டம் CIIHE இன் உடல்நலம் மற்றும் வாழ்க்கை அறிவியல் பீடத்தால் வழங்கப்படுகிறது மற்றும் பேராசிரியர் அனில் குணதிலக்க தலைமையில் இப் பீடம் செயற்படுகிறது. இலங்கையின் முன்னணி வைத்தியர்கள் மற்றும் மருத்துவ பீடங்களின் விரிவுரையாளர்கள் பலர் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை கற்பிப்பதில் ஈடுபடுவார்கள்.


Mr. Anura Liyanage
Manager Admissions

திரு. அனுர லியனகே, Admissions Manager
குறைந்த கட்டணத்தில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் திட்டங்களில் இது ஒன்றாகும்

இக் கல்வித் திட்டம் மற்றும் அவற்றின் நிதி நன்மைகள் பற்றிய மேலதிக விபரங்களை கண்டறிய நீங்கள் விரும்பினால், CIIHE இல் உள்ள மருத்துவ மற்றும் சுகாதார அறிவியல் பீடத்திற்கான சேர்க்கை முகாமையாளர் (Admissions Manager) திரு. அனுர லியனகேவுடன் சந்திப்பை மேற்கொள்ளலாம். 0117 212 600, 0117 212 620 அல்லது 070 341 8002 என்ற எண்ணில் அவரை அழைக்கவும்.

(cr.40247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 23 இல் இருந்து 24 ஆவது வருடத்தில்



## தடம் பதிக்கிறது

என்றும் உங்கள்

# கரிகணன்

வடக்கின் அச்சகதாரர்

**வாடிக்கையாளர்களிற்கான எமது சேவைகள் என்றும் தொடரும்**

**'காலத்தால் நிலைத்து நிற்பவன் கரிகணன்'**

கரிகணன் குடும்பத்தினர்

---

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 . 12 . 1928 | 30 . 06 . 2023 |



## திரு. சின்னையா தில்லையம்பலம்

**(ஓய்வுபெற்ற காணி மேற்பார்வையாளர்,**
**முன்னாள் தலைவர் – நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**முன்னாள் தலைவர் – நெடுந்தீவு கரமத்தை கந்தசுவாமி ஆலயம்,**
**முன்னாள் உபதலைவர் – ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம்)**

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னையா தில்லையம்பலம் நேற்றுமுன்தினம் (30.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மை (ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்பு சகோதரனும், சாரதாதேவி (முன்னாள் அதிபர் - நெடுந்தீவு ம.வி. முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளர் - நெடுந்தீவு), கங்காதரன்(லண்டன்), தயாநிதி (ஆசிரியர், கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை ), கிரிதரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாவட்ட தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஸ்ணதாஸ் (ஓய்வு பெற்ற பதிவாளர்), உதயராணி (லண்டன்), தர்மரத்தினம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), யோகலட்சுமி ( சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரமணன்-துஷ்யந்தினி, ரதீபன், காயத்திரி - பிரகாஷ், சர்மிலன் - மஞ்சுஹா , பரந்தகன், கிறிஸ்ணி - ஜனேஸ், கிருஷாந், கிறிஸ்துகா, கிறிஸ்துயா, தர்ஷிகா- சக்திவேல்நாதன், சுஜீவன், பிரணவி, பைரவி ஆகியோரின் பாசமிகு பேரனும், நெனிஹா, பவானிகா, சேயோன், திவ்வியன், ஆத்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2023) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் சிவப்பிரகாசம் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**39/12 வைரவர் கோவில் ஒழுங்கை ,**
**சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

(CS/51074)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**
**077464 1123**

---

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)

**பதிவு இல / திகதி : - J 1594 - 11.03.1972**

### 01 விற்பனை உதவியாளர்

குறியீட்டு இல - 308 / 15 (02 / 2022) இன் படி)
சம்பள அளவுத் திட்டம் - 17435 - 145 x 10 - (160x10 - 20485)
(இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களிற்கமைவாக இதர படிகளும் வழங்கப்படும்.
பால் - ஆண்

### தகைமைகள் :

அ. கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் / எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

குறிப்பு:

1. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களிற்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
2. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப் பிரமாணங்களிற்கு அமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
4. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

### விண்ணப்ப முடிவு திகதி : 17.07.2023

மேற்படி பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **விற்பனை உதவியாளர் (308/15) பவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு 17.07.2023 ஆம் திகதிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ப.தெ.வ.அபி.கூட். சங்கம்,**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**
**02.07.2023**

(cr.40269) N - 1

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**தலைவர்**
**திரு.சி.சுதர்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையாக ஆட்சி செய்தாலேயே மக்கள் அர்ப்பணிப்போடு இருப்பர்!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

தமது தலைவர்கள், தம்மை வழிநடத்துபவர்கள், தமது ஆட்சியாளர்கள் நேர்மையானவர்கள் என நம்பினாலேயே, மக்கள் நாட்டுக்காக, தாங்கள் சரியென நம்புகின்ற விடயத்துக்காக எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்யத் தயாராகவே இருக்கிறார்கள் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மக்கள் தமது தேச விடுதலைக்காக, தமது உரிமைகளுக்காக தமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார்கள். தெற்கில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதென நம்புகிற போது தென்னிலங்கை இளைஞர்கள் சில தடவைகள் புரட்சியில் ஈடுபட்டு உயிரை அர்ப்பணித்திருந்தார்கள். இராணுவத்தை எடுத்துக்கொண்டால்கூட அவர்கள் தாம் சரியென நம்பிய ஒரு விடயத்துக்காக உயிரை கொடுக்க முன்வந்திருந்தார்கள்.

அதுபோல இந்தப் பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் அதில் இருந்து மீளுவதற்காக மக்கள் எந்தவொரு தியாகத்தையும் செய்யத் தயாராகவே இருப்பார்கள். ஆனால் நான் முதலில் சொன்னவாறு, தம்மை ஆள்பவர்கள் நேர்மையானவர்களாக இருந்தால் மட்டுமே மக்களும் எந்த சவாலையும் எதிர்கொண்டு தியாகம் செய்யத் துணிவர். ஆனால் இன்று எமக்கு முன்னால் இருப்பது யார்? நாட்டை வங்குரோத்து ஆக்கியவர்களும் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் மூலம் பொருளாதாரத்தைச் சூறையாடியவர்களும் சோடி சேர்ந்துகொண்டு நாட்டை ஆளும்போது, அவர்கள் நாட்டின் பொருளாதாரத்தைச் சீராக்கி மக்களின் நலன்களை முன்னிறுத்தி முடிவெடுப்பார்கள் என்று எவருக்கும் துளியளவு நம்பிக்கையும் இருக்காது - என்றார். (அ-ஓ.5)

# தண்டனை பெறும் சிறுவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில்!

## நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 2

இளம் குற்றவாளிகள் 11 பேரில் 9 பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளதாக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் டிலான் பெரேரா தலைமையில் அண்மையில் கூடியது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் உள்ள வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரி மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் ஆகியவை நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அழைக்கப்பட்டிருந்தன.

16 - 22 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் குற்றம் செய்ததற்காக குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட இளம் குற்றவாளிகள் இந்த நிறுவனத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் காலம் சிறைத்தண்டனை அல்ல, 3 ஆண்டுகள் கட்டாய தடுத்து வைப்புக் காலம் என்றும், தடுத்து வைப்புக் காலத்துக்குப் பின்னர் சிறுவர்கள் வெளிச் சூழலில் அரசாங்க வேலைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரியின் மூத்த உதவிச் செயலர் ஏ.வி.வஜிரா தமயந்தி தெரிவித்தார்.

நிறுவனத்தின் தரவுகளின்படி, 2013-2022 காலகட்டத்தில் இளம் குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படும் போக்குக் குறைவடைந்து வருவதாகவும், இந்தப் பயிற்சிக் கல்லூரியில் நுழையும் பல சிறுவர்களின் குடும்ப உறவுகள் இல்லாமற்போவதும் தெரிய வந்துள்ளது.

வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரியில் கல்வி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய பாடசாலைக் கல்வி வழங்கப்படுவதாகவும், இது அவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு அமைய அங்குள்ள சிறுவர்கள் பொதுவான பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றபோது தேர்ச்சிவீதம் குறைவாகவே காணப்படுகிறது.

பாடசாலைக் கல்வியைக் கட்டாயமாக்கும் சட்டத்தின் மூலம் அவர்களுக்குத் தொழில்முறைக் கல்வியை திறம்பட வழங்குவதில் சிக்கல் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்தக் கொள்கைகள் மாற்றப்படவேண்டும் என்பதை உணர்ந்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கக்குழு இணங்கியது.

இளம் குற்றவாளிகளில் எத்தனை பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்ற கேள்வியை குழு எழுப்பியது. இதற்குப் பதில் வழங்கிய அதிகாரிகள் 11 பேரில் 9 பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்றனர் - என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ.இ)


தொழிநுட்ப உதவி நிறைவேற்று அதிகாரி
கிழக்கு மற்றும் வட மாகாணங்கள்
(வெளிப்புற மோட்டார்கள் Outboard Motors)

YAMAHA

AMW நிறுவனத்தில் நீங்கள் எந்தப் பங்கை வகித்தாலும் இங்கு இரு வெவ்வேறு நாட்கள் ஒரே மாதிரியாக இருக்காது. எமது பணிகளானவை, மாற்றத்தை வேண்டி நிற்கின்ற அபிலாஷைகளினால் இயக்கப்படுவதுடன், அன்றாட வாழ்வின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான அர்த்தமுடைய தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. ஈடுபாடுடையதும், பக்க பலத்தைக் கொண்டதுமான எமது வேலைச் சூழலில் வாய்ப்புப்பெற்று அதனை நிறுவனக் கலாசாரத்தினை பின்பற்றி இரட்டிப்பாக்குவதன் மூலமாக உங்கள் தொழிலுக்குரிய நியாயமான அங்கீகாரத்தையும், வெகுமதியினையும் அடைந்து கொள்ள முடியும். அவ்வாறு எதனை அடைந்து கொள்ள முடியும்? ஒவ்வொரு நாளும் வரையறைகளை கடந்து செல்வதற்கான வாய்ப்பை பெறுவீர்கள்.

74 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கண்ணியம்மிக்க வணிகக் குடும்பமான AMW நிறுவனமானது ஐக்கிய அரபு இராச்சியத்தில் (UAE) புகழ் பெற்று விளங்கும் அல் /புட்டைம் குழுமத்தினால் (Al Futtaim Group - AFG) முழு உடைமையாக்கப்பட்ட துணை நிறுவனமாக இலங்கையில் வாகன தொழில் துறையில் முன்னோடி நிறுவனமொன்றாக தற்போது விளங்கி வருகிறது.

பிரதான கடமைகள் மற்றும் பொறுப்புகள்

- தொழிநுட்பம் சார்ந்த முறைப்பாடுகள் மற்றும் துரிதமாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- வெளிப்புற மோட்டார் என்ஜின்கள் தொடர்பான உத்தரவாத மாதிரிப் பரிசோதனைகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- வாடிக்கையாளர் விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துதல்.
- சேவை வலையமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இனங்காணுதல் மற்றும் சமூகமளித்தல்.
- AMW வலையமைப்பிலுள்ள உத்தரவாத அதிகாரமளிப்பு மற்றும் நேரடி உத்தரவாத முறைப்பாடுகளை கையாளுதலும், சமூகமளித்தலும்
- வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனை ஊழியர்களுக்கு தேவையான எச்சந்தர்ப்பத்திலும், 24/7 நேர தொழிநுட்ப சேவைகளை வழங்குதல்.

முக்கிய தகைமைகள்:

- செல்லுபடியாகும் சாரதி (மோட்டார் சைக்கிள் / வாகனம்) அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல். மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண கரையோரப் பிரதேசங்களில் வாகனங்களைச் செலுத்துவதற்கு முடியுமானவராக இருத்தல்.
- வெளிப்புற மோட்டார் தொழிநுட்ப கோளாறுகளை திருத்தம் செய்யக்கூடிய தகைமை பெற்ற தொழிநுட்ப அதிகாரியாக இருத்தல்.
- கடற்துறை பொறியியல் தொடர்பான டிப்ளோமா அல்லது அதனையொத்த உயர் கல்வி தகைமையைக் கொண்டிருத்தல் மேலதிக அனுகூலமாகக் கருதப்படும்.
- வெளிப்புற மோட்டார் தொழிநுட்ப அதிகாரியாக (பூரண அல்லது பகுதியளவு திறமையுடைய) 2 - 4 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
- அழுத்தமான வேலைச் சூழலில் பணி புரியக்கூடிய ஆற்றல் மற்றும் சிறப்பான ஆளிடைத் தொடர்பு திறன் மற்றும் தூர பயணங்களுக்கு விருப்பமுடையவராக இருத்தல்.
- சிறந்த பேச்சாற்றல் மற்றும் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி அவசியம்

இந்தத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் உங்களுடைய சுய விபரங்களடங்கிய விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

amw.careerswithus@amwltd.com

பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கும் அனுப்ப முடியும்.

skillsads

முகாமையாளர் - ஆட்சேர்ப்பு
அசோஸியேட் மோட்டர்வேஸ் (தனியார்) கம்பனி
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02


# வங்குரோத்து நிலைமைக்கு 225 எம்.பி.க்களே பொறுப்பு

## நீதி அமைச்சர் விஜயதாஸ சாடல்

கொழும்பு, ஜூலை 2

நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளமைக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூறவேண்டும். கடன் பெற்ற அரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று ஆளும், எதிர்க்கட்சி பக்கம் உள்ளார்கள். கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை தவிர்த்து சிறந்த மாற்றுத்திட்டத்தை முன்வைத்தால் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி அதனை விரைவாகச் செயற்படுத்தத் தயார் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் மேலும் உரையாற்றியதாவது:-

பொருளாதாரப் பாதிப்பு ஓரிரு நாட்களில் இடம்பெற்றதொன்றல்ல. 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோத்தாபய ஒருதரப்பினரது ஆலோசனைக்கு அமைய வரிச் சலுகை வழங்கினார். உரம் தொடர்பில் தவறான தீர்மானத்தை எடுத்தார். பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. 75 ஆண்டு கால ஆட்சியாளர்கள் திருடர்கள், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

காலத்துக்குக்காலம் பொருளாதாரக் கொள்கையை அரசியல் தேவைகளுக்காக மாற்றியமைத்ததால் நாடு என்ற ரீதியில் வீழ்ச்சியடைந்தோம். 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டியிருந்தது. தற்போது வங்குரோத்து நிலையடைந்துள்ள பின்னணியில் 17ஆவது தடவையாக ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளோம் - என்றார். (அ-ஓ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 இலட்சம் பேருக்கு அநீதி இழைப்பு

## சாடுகிறார் நிதிக் குழுத் தலைவர் ஹர்ஷ

கொழும்பு, ஜூலை 2

கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியத்தின் 25 லட்சம் உறுப்பினர்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கிறது. அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. அவர்களுக்கு அநீதி ஏற்படுவதைத் தவிர்த்து கடன் மறுசீரமைப்புக்கு செல்ல முடியுமானால் அது தொடர்பில் கலந்துரையாட முடியும் என்று நிதிக் குழுவின் தலைவரும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் உரையாற்றுகையில்;

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு செல்லாவிட்டால் நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லும் என நாங்கள் 2021 வரவு - செலவுத் திட்டத்தின்போது தெரிவித்திருந்தோம். அதேநேரம் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அவ்வாறு தேசியக் கடன் மறுசீரமைப்பு மேற்கொண்டே ஆக வேண்டும் என்றால் கடன் தவணைக் காலத்தை நீடித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றே நாங்கள் அன்று தெரிவித்திருந்தோம். ஆனால், அரசாங்கம் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

கடன் மறுசீரமைப்பின்போது 25 இலட்சம் ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கிறது. அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதேநேரம் இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் இன்று (நேற்று) அனுமதிக்கப்பட்டவுடன் இதனை ஊழியர் சேமலாப நிதியத்துக்கு சமர்ப்பித்து கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்போவதில்லை. அரசாங்கத்தால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வழங்கி 21 நாட்களுக்குப் பின்னரே அதற்கு இணக்கம் தெரிவிப்பதா? இல்லையா? எனத் தீர்மானிக்கும். அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு, கணக்கு வழக்குகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உள்ளது. அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிப்பதா, இல்லையா எனத் தீர்மானம் மேற்கொள்வது யார்?

25 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஊழியர் சேமலாப நிதியத்தில் அதன் நிர்வாக சபையில் ஒரு உறுப்பினர் கூட இல்லை. நிதிச் சபையின் உறுப்பினர்களே இதில் இருக்கின்றனர். அதனால் நிதிச் சபையில் இருப்பவர்கள் இந்த 25 இலட்சம் உறுப்பினர்களுக்கும் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் கவனத்திற்கொண்டு செயற்படுவார்களா என்ற கேள்வி எழுகிறது.

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 9 வீத வட்டி கிடைக்குமா? அதனை சட்டமாக்க முடியுமா? என நாங்கள் நிதிச்சபையில் கேள்வி எழுப்பினோம். அது அநீதியான கோரிக்கை அல்ல. அத்துடன் ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கு குரல்கொடுப்பதற்கு யாரும் இல்லை. எதிர்க்கட்சிகள் மாத்திரம் குரல் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் பணம் முதலீடு செய்யப்பட்டால் அவர்களுக்கு வட்டி சேர்க்கப்பட்டே ஆகவேண்டும்.

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கு ஏற்படும் அநீதியை இல்லாமல் செய்து, இது தொடர்பில் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்குமானால் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் - என்றார்.


(அ-ஒ.இ)


**தேவை**

யாழ். நகரில் இயங்கும் சிறிய விடுதிக்கு பெண் அறை பராமரிப்பாளர் தேவை. சம்பளம் 20,000/= **077 9938 348**


## மரண அறிவித்தல்

### கணபதி விஸ்வலிங்கம்



தோற்றம் 09.01.1949 — மறைவு 01.07.2023

வட்டுத் தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பூதர்மடம் கோப்பாய் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி விஸ்வலிங்கம் நேற்று (01.07.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா நல்லபிள்ளை தம்பதியரின் மருமகனும், இராசா, காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சின்னமணி, கந்தசாமி, மாணிக்கம், வைத்திலிங்கம், சின்னையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நாகபூசணியின் அன்புக் கணவரும், ரோகினி (மாகாண உள்ளக கணக்காய்வு அலுவலகம்-மு.சே.உ), தீபன் (பிரதேச செயலகம், வேலணை -அ.உ), தீசன் (மாகாண கட்டடங்கள் திணைக்களம், மு.சே.உ), சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலிப்குமார் (பிரதேச செயலகம், தென்மராட்சி, அ.உ), வசந்தகுமாரி ஆகியோரின் மாமனாரும், சத்ஜனி, ருத்மிதன், பிரித்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25415)A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 10 . 1942 — மறைவு 01 . 07 . 2023

### திருமதி யோகலீலா தேவசுந்தரம்
(யோகா)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகலீலா தேவசுந்தரம் நேற்று (01.07.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மங்கையர்க்கரசி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தேவசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், யோகரட்ணராஜா, பத்மலீலா, இந்திரலீலா, சந்திரலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிராமி (உயர் தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்), குருபரன் (சத்திர சிகிச்சைப் பிரிவு - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தபேஸ்குமார் (யாழ். மாகாண சபை - கைதடி), கிரிஷ்மாலி (காசநோய் வைத்தியசாலை - பண்ணை) ஆகியோரின் அன்பு மாமியும், லேதுஜா, மோகிலன், ராகவி, ஆராதனா, ஆதர்ஷா ஆகியோரின் அன்புப் பேரத்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/24, "யோகவாசா",
நல்லூர் வடக்கு, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 9791

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 09 . 1935 — மறைவு 30 . 06 . 2023

### அப்புக்குட்டி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

சேகரம் வீதி, தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி செல்லத்துரை அவர்கள் கடந்த (30.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், யோகமலரின் அன்புக் கணவரும், சுதாகரன் (சுவிஸ்), சுகிர்தா (யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), சதீஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜிதா (சுவிஸ்), குணேந்திரராஜா (மோகன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), டிலானி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷகின், ஷர்வின், சர்நிகா, ஷங்கீத், தர்ணீத், மீரஜன், பாதுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மாரிமுத்து மற்றும் சரஸ்வதி, சிவனடியான், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், இராசமலர், அழகராசா, நேசமலர், புஸ்பமாலா மற்றும் பாலசிங்கம், செல்வராஜா, ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2023) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

010/12, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6070 705

(CS 25417) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.எப்., ஈ.ரி.எப். மீது பலவந்தமாக கைவைப்பு

## அரசாங்கத்தை சாடும் ஜே.வி.பி.

தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் (ஈ.பி.எப்.) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈ.ரி.எப்.) ஆகியவற்றின் மீது பலவந்தமான முறையில் கை வைக்கப்பட்டுள்ளது. 9 சதவீத வட்டி வழங்கலுக்கு எவ்வித சட்ட உத்தரவாதமும் கிடையாது. நடுத்தர மக்களின் சேமிப்பை கொள்ளையடிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு துணைபோக முடியாது என்பதால் தேசியக் கடன் மறுசீரமைப்புக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்தோம் - என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மேலும் அவர் உரையாற்றுகையில்;

தேசியக் கடனை ஒருபோதும் மறுசீரமைக்கப் போவதில்லை என அரசாங்கம் கடந்த காலங்களில் குறிப்பிட்டது. ஆனால், அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி பொய்யாக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில், இரு தரப்புக் கடன் வழங்குநர்களுடனான செயற்பாடு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டும் என விதிக்கப்பட்ட நிபந்தனைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது. இருப்பினும் தேசியக் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவில்லை.

தனியார் துறையில் தொழில்புரியும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் மீது அரசாங்கம் கை வைத்துள்ளது. இவர்களுக்கான வட்டியை தீர்மானிக்கும் பொறுப்பு மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பிரதான விநியோகஸ்தர்களுக்கு தேசியக் கடன் மறுசீரமைப்பு விலக்களிக்கப்பட்டுள்ளமை முற்றிலும் தவறானது. தேசியக் கடன் மறுசீரமைக்கப்படும் அரசாங்கத்தின் தீர்மானத்தில் தனியார் ஆரம்ப விநியோகஸ்தர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள்.

ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிடும் பொய்யை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எப். ஆகியவற்றுக்கு ஏற்படுத்தப் போகும் மாற்றம் தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என அதன் தலைவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் 9 சதவீத வட்டிக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிடுவதை நம்ப முடியாது. ஏனெனில் இந்த 9 சதவீத வட்டிக்கு எவ்வித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வது சந்தேகத்துக்குரியதே - என்றார். (அ-ஒ.இ)

### ஈ.பி.எவ்...

இறையாண்மைப் படுகடன் நிலைபெறு தன்மையை மீட்டெடுப்பதற்கு உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை விவாதம் நடைபெற்றது. இரவு 7.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் பதிவாகின.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்ற விவரத்தை உள்ளடக்காமலேயே நேற்றுக் காலை அரசாங்கத்தின் யோசனை முன்வைக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையடுத்து ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஊடாகவே இதனை முன்னெடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டு திருத்தப்பட்ட யோசனை முன்வைக்கப்பட்டது. அதன் மீது விவாதம் முன்னெடுக்கப்பட்டு இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவரது கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் ஆதரவாகவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், இரா.சாணக்கியன், த.கலையரசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் எதிராகவும் வாக்களித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்கு சமுகமளித்த போதும் வாக்கெடுப்பின்போது பிரசன்னமாகியிருக்கவில்லை.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் சபை அமர்வில் நேற்றுக் கலந்துகொள்ளவில்லை.

சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களில் டலஸ் அழகப்பெரும தலைமையில் சுயாதீன அணியாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்சன யாப்பா, சுதர்சினி பெர்ணாண்டோ புள்ளே, குமார வெல்கம ஆகியோரும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். (அ-ஒ,5)

### பெண்ணுடன்...

பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகர பழக்கடையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரி ஒருவர், நேற்றுமுன்தினம் பகல் உந்துருளியில் வந்த இருவரால் இழுத்து ஏற்றிக் கடத்திச் செல்லப்பட்டார். அவரை கடத்திச் சென்றவர்கள் உள்ளாடையுடன் வைத்து கடுமையாகத் தாக்கி அதைக் காணொலியாகப் பதிவு செய்துள்ளனர். அதன் பின்னர் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான பழக்கடை வியாபாரியால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்தவின் கீழ் பதில் பொறுப்பதிகாரி உ[illegible] பிரதீப் தலைமையில் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். முறைப்பாடு கிடைத்த சில மணி நேரங்களிலேயே பழக்கடை வியாபாரியை கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

நல்லூர், அரசடியைச் சேர்ந்த நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர். பழங்கள் வாங்கச் சென்ற இளம் பெண் ஒருவருடன் தகாத முறையில் அந்த வியாபாரி உரையாடினார் என்றும், அதைத் தட்டிக் கேட்ட ஒருவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார் என்றும், அதனாலேயே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் சந்தேகநபர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும், கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் மற்றும் கத்தி என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

### அநாகரிகமாகச்...

முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவை தொடருமானால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பழம் வாங்கச் சென்ற பெண்ணுடன் முறைதவறி உரையாடினார் என்று தெரிவித்து பழக்கடை வியாபாரி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டிருந்தார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகர்ப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடுவர்கள் நுகர்வோருடன் நாகரிகமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு செயற்பட்டால் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வீதியோர வியாபாரத்தில் ஈடுபடும் சிலரது நடவடிக்கையால் அனைவருக்கும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்படும் நிலையில், எதிர்காலத்தில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டு அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-எ-26)

### சிகரெட்...

பியரின் விலை 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - சிகரெட்டின் வகைகளுக்கு ஏற்ப நான்கு வகைகளில் 5, 15, 20 மற்றும் 25 ரூபாவால் அவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ.இ)

### வெள்ளி,...

இந்தத் திட்டம் மாவட்டத்தில் இன்றிலிருந்து நடைமுறையாகின்றது-இவ்வாறு மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டச் செயலகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் கல்வி நிறுவனங்களை விடுமுறை நாளாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

இது குறித்து கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் முகமாக யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் பிரதேச செயலர்கள் ஊடாக 200 தனியார் கல்வி நிறுவனங்களும், 200 குழு வகுப்புக்களை நடத்துகின்ற இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பிரதேச செயலர்கள் மூலம் கண்காணிப்புக்கள் இடம்பெறவுள்ளன. மாணவர்களின் எதிர்கால மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுள்ள இந்த விசேட நடைமுறையை மனிதாபிமான அடிப்படையில் அனைத்து கல்வி நிறுவன, குழு வகுப்புக்களை நடத்தும் உரிமையாளர்களும் கவனத்திற்கொண்டு இன்று முதல் செயற்படுத்த வேண்டும்- என்றார். (அ-ஒ,125)

### பாடசாலைச்...

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டத்தின் சிறந்த சுற்றாடல், சுகாதாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரோக்கிய நகர் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நகர்ப்புறப் பாடசாலைகளின் ஆரம்ப நேரம் மற்றும் முடிவுறும் நேரங்களில் அதனைச் சூழவுள்ள வீதிகள் ஒரு வழித் தடமாக அறிவிக்கப்படவுள்ளன. இதன் மூலம் மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்து உறுதிப்படுத்தப்படும். அநாவசியமானவர்களின் நடமாட்டமும் குறைக்கப்படும். மாணவர் பாதுகாப்பு அதிகரிக்கும். பாடசாலை மாணவர்களை ஏற்றுகின்ற பேருந்துகள், முச்சக்கரவண்டிகள், வாகனங்கள் ஒரே தடவையில் அனுமதிக்கப்பட்டு குறிப்பிட்ட நேரத்துக்குள் பாதுகாப்பான முறையில் செல்லமுடியும்.

பாடசாலைகளுக்கு அருகாமையில் கற்றல் நடவடிக்கைகளுக்கும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலுமுள்ள வர்த்தக நிலையங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். இது தொடர்பான ஒழுங்குமுறைகள் வர்த்தமானியிலே பிரசுரிக்கப்படும்.

முதற்கட்டமாக சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சூழவுள்ள வீதிகளில் இந்தச் செயற்றிட்டம் நடைமுறையாகவுள்ளது. ஏற்கனவே ஓரிரு பாடசாலைகளில் ஒரு வழித்தடம் நடைமுறையில் உள்ள நிலையில் தொடர்ச்சியாக அனைத்துப் படசாலைகளிலும் ஆரோக்கிய நகரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (அ-ஒ,125)

### வடக்கில்...

ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு பரவலாக சற்று மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

நல்லூர் ஆலயத்தின் மாநகரசபைக்கு அண்மையாக 2 அறைகள், குளியலறை மற்றும் வாகனத் தரிப்பிடம் உள்ளடங்கலாக நவீன வசதிகளுடன் கூடிய அழகிய வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 076 352 8517
077 837 4756

(CS51052) AH-1

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு உலகத் தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களைக் கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம்.

**Finex**(ஸ்தாபனத்தில் சகல கட்ட இரசாயனப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்)

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## உதவியாளர் தேவை

வயதான ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு உதவியாளர் தேவை.

075 062 8148

## Tuition

An experienced graduate in English offers tuition in English Lierature for G.C.E (O/L) Students. Hoping to Start with grade 9. Suitable for Students residing in and around Jaffna Town.

**Contact: 077 381 5579**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்திற்கு முகாமையாளர் மற்றும் கணக்காளர் தேவை.

- முகாமையாளர் 05 வருட அனுபவத்துடன் கூடிய 35 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் நன்று.
- கணக்காளர் 02 வருட அனுபவத்துடன் கூடிய கணினி அறிவு இருத்தல் அவசியம்.

தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 788 7830

10 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

## தவறவிடப்பட்டது

மல்லாகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட வீதியில் **யாக்கோப் பென்ஜமின் வில்லியம் ஜெயபாலன்** எனும் பெயரை உடைய **கடவுச் சீட்டுடன் கூடிய பை ஒன்று** தவறவிடப்பட்டது. கண்டவர்கள் அதை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

075 325 2624, 077 658 4206

(CS51082) AH-1

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா பாடசாலைக்கு அருகாமையில் (யாழ். போதனா வைத்தியசாலைக்கு 1 1/2km தூரத்தில் ) மூன்று அறை, சமையல் அறை, வரவேற்பறையுடன் கூடிய மேல்மாடி வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

071 447 2726

## வேலை வாய்ப்பு

**யாழ்நகர் வல்வெட்டித்துறையில் சூரிய சக்தி மூலமாக இயங்கும்**

13H/P வலு கொண்ட Motor இல் இயங்கும் வள்ளத்தில் சென்று மீன்பிடிக்க அனுபவமுள்ளவர்கள் வேண்டும். **மாதாந்தம் 100,000/- சம்பளமும்** பிடிக்கும் மீனில் 25% வீத தரகுப் பணம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 787 1320
Whatsapp - 0060 - 123 888 676

(CS/51070) AH-1

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த அவிட்டம் 4ம் பாதம் இந்து உயர்குலம் மணமகனுக்கு (வலது காலில் சிறிது ஊனம்) தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.

077 267 3027, 077 915 3121

## Hotel Vacancy

- **Manager**
- **Receptionist**
- **Maint. Supervisor**
- **Waiters**
- **Room boy**

**076 419 2934**

(CS/ 51085) AH-1

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

**உரிமையாளர்:**
தே. கலைத்தாசன் (கரன்)
021 3155 900

**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.**

## தாதியர் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற பிரபல பல் வைத்திய நிறுவனமாகிய**

**International Dental Care Hospitals (Pvt) Ltd.**

**பல் வைத்திய நிறுவனத்துக்கு**



**தகைமை**

- பயிற்சி பெற்றவர்கள்: Nursing Training முடித்தவர்கள் (முன்னுரிமை வழங்கப்படும்)
- வயது : 18-23 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள்.
- சம்பளம்: 30,000.00

**International Dental Care**
**No.84, Stanly Road,**
**Jaffna, Sri Lanka.**
**077 758 8729**

(CS 51066) AH-1

1st ACCOUNTING SOLUTIONS

**CAREER OPPORTUNITIES**
**Senior Accounts Executive**

## Working Location :- Nallur Jaffna

***Qualifications***

- Degree holder in Accounting / Finance or HNDA
- Part qualified in AAT, ACCA, CA Sri Lanka or CIMA
- Fluency in Microsoft office and Accounting software (Sage, Xero, QuickBooks, etc).
- Three years experience in relevant field is considered as added advantage.

An attractive and negotiable remuneration package is on offer to the selected candidate.

Fluency in English is preferred.

Please forward your CV to; mathiy@accountantsrus.net or cv@1staccountingsolutions.com on or before 9th July 2023.

**Contact Number** 021 2222672
(Contact time 1.00 p.m to 9.00 p.m)

**www.1staccountingsolutions.com**

(cs.51041) (N - 1)

## காணி குத்தகைக்கு

யாழ். நெல்லியடிச் சந்திக்கு அடுத்து நாவலர்மடம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில், கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு அருகில் 1 பரப்பு, 14 குழி வெற்றுக்காணி குத்தகைக்குண்டு. அலுவலக அல்லது வியாபார நோக்கத்துக்கு உகந்தது.

**கொழும்பு - 077 706 1682**
**யாழ்ப்பாணம் - 077 971 3941**

(CS52986) AH-1

### ஊடகங்களுடன்...

யாழ்ப்பாணத் வந்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று பொலிஸாருக்கான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டார். பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய காங்கேசன்துறை, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பகுதிகளில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பொலிஸ் அதிகாரிகள் என்ற ரீதியில் ஊடகவியலாளர்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது? அத்துடன் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பாகபொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கம்கொடுக்கப்பட்டுள்ளது. பொது மக்களுடன் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்ப்பது என்பது தொடர்பில் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்க பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. குழப்பங்கள் ஏற்பாதவகையில்பொலிஸார் செயற்பட வேண்டும். போராட்டங்களைத் தடுக்கும் போதுமுரண்பாடான நிலைமை ஏற்படுகின்றது. ஊடகவியலாளர்கள் 24 மணிநேரமும் சமூக சேவையில் ஈடுபடுகின்றனர். பொலிஸாரும் 24 மணிநேரமும் கடமையில் ஈடுபடுகின்றனர். இந்த இரு தரப்பினரின் சேவைகளும் சமூகத்துக்கு அவசியமானது - என்றார்.

(அ-எ-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண் ... ஞாயிற்றுக்கிழமை (02.07.2023)

எப்போது கடல்
அபகரித்துச் சென்றதோ தெரியவில்லை
கொண்டு வந்து கரை சேர்த்த
பிஞ்சுச் சடலத்தின் கைகள்
மூடியிருந்தன
பலவந்தமாய்ப் பிரித்துப் பார்த்தபோது
கண்டேன்
கொஞ்சம் மண்ணையும்
அதில் துளிர்விட்டிருந்த
ஏதோ சிறுசெடியையும்

- சுகுமாரன்

# சானுயா: ஒரு வீரத்தாயின் வீரப்புதல்வி

○ மு. தமிழ்ச்செல்வன்



அது 2006 ஆம் ஆண்டாக இருக்கவேண்டும். தனது ஒன்றரை வயதுக் குழந்தையை அப்பம்மாவுடன் கிளிநொச்சி இரணைமடுவில் உள்ள வீட்டில் விட்டுவிட்டு முகமாலை முன்னரங்க யுத்த களமுனை நோக்கிச் செல்கின்றாள் தவராசா தயானி. தனது பச்சிளம் குழந்தையை விட பெற்ற தாய் நாட்டின் மீதான அதீத பாசமே தயானியின் இந்த முடிவுக்கு ஒரேயொரு காரணம்.

'நான் ஒரு பாலூட்டும் தாய் என்னால் களமுனைக்குச் செல்லமுடியாது' என தயானி அன்று அதனைத் தவிர்த்திருக்கலாம். 'தன் குடும்பத்தை விடவும் மக்களின் விடுதலையை அவள் நேசித்தாள். அதனால் அவள் அதனை அன்று விரும்ப வில்லை' என தயானியின் சகோதரி சொல்கின்றார்.

புறநானூறை விஞ்சிய வீரப் பெண்ணாக முகமாலை நோக்கிச் சென்றவள் இரண்டாம் நாள், 'கப்டன் தென்னரசியாக' தோழிகளால் கிளிநொச்சியில் உள்ள அவளது இல்லத்துக்கு வித்துடலாகச் சுமந்துவரப்பட்டாள். இவளது கணவரும் ஒரு போராளி. அவரும் இப்போது உயிரோடு இல்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதனை அறியவதற்கும் வழியில்லை. இருப்பினும் ஒன்று மட்டுமே தெளிவாகப் புரிகிறது, தமிழினத்துக்காக தம்மிருவரையும் அந்தத் தம்பதியர் ஆகுதியாக்கியிருக்கின்றனர்.

இரணைமடுவில் உள்ள தயானியின் இல்லத்தில் இறுதி வீரவணக்க நிகழ்வுகள் நடந்தபோது,அவளின் அந்த ஒன்றரை வயதுக் குழந்தைக்கு நடப்பது எதுமே தெரியாது. காலங்கள் கடந்தன.

கடும் யுத்தம் , இடப்பெயர்வு என தொடரும் அவலத்துக்குள் அந்தக் குழந்தையின் அப்பம்மாவும் இறந்துவிடுகிறார். யாருமற்ற அந்தக் குழந்தை இப்போது தயானியின் அக்காவுடன் அதாவது பெரியம்மாவுடன் வாழத்தொடங்கியது. மீள்குடியேறும்போது குழந்தை மாமாவின் பதிவில் பரந்தனில் குடியேறுகிறது.

பின்னர் இந்தக் குழந்தை 24.01.2010 இல் தனது ஆறு வயதில் மகாதேவா சிறுவர் இல்லத்தில்அதாவது குருகுலத்தில் தவராசா சானுயாவாக செல்கிறாள். இந்த சானுயாவே கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் இந்தியாவின் தலைநகர் புதுடெல்யில் நடைபெற்ற இந்திய பகிரங்க சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை தேசிய அணியின் சார்பில் பங்குபற்றி வெண்கலப் பதக்கம் பெற்று நாடு திரும்பிய வீரப்புதல்வி.

மறக்கடிக்கப்பட்ட எம் வீரயுகத்தில் வாழ்ந்த வீரத்தாயினதும், வீரத்தந்தையினதும் மகளாகப் பிறந்து, அவர்களது முகம் அறியாமல் வளர்ந்த சானுயா இன்று விளையாட்டில் வீர மகளாக வலம் வருகிறாள்.புலிக்குப் பிறந்தவள் பூனையாவாளா?

சிறுவர் இல்லத்தில் இணைக்கப்பட்ட காலத்தில் இருந்தே கராத்தே கலையினைப் பயின்று வந்து சானுயா தனது ஏழாவது வயதில் இலங்கை கராத்தே சம்மேளனத்தால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கரோத்தே போட்டியில் முதல் தடவையாகப் பங்குபற்றி பதக்கத்தை வென்றதோடு, தொடர்ந்து 14 வயதிலும் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கராத்தே போட்டியில் பங்குபற்றி பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். ஒன்பது வருடங்களின் பின் கடந்த வருடம் விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி சார்பாக பங்கு பற்றி பதக்கம் வென்றதன் மூலம் இலங்கை தேசிய கராத்தே அணிக்கு தெரிவு செய்யப்பட்டாள் சானுயா. இந்தப் போட்டியில் வடக்கு மாகாணம் ஏழு பதக்கங்களை வென்றது.

இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி 4 பதக்கங்களைப் பெற்றது. இந்த நான்கு பதக்கங்களும் மகாதேவா சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளால் பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

சானுயாவுக்கு ஆரம்பம் முதல் இன்றுவரை கராத்தே பயிற்சியை சிறுவர் இல்லத்தில் வழங்கி வருகின்றவர் சின்னத்துரை விஜயராஜ். இவர் கராத்தே ஏழாவது கறுப்புப் பட்டி, மற்றும் 'ஏ 'தர கராத்தே நடுவராகவும், வடக்கின் சிறந்த பயிற்றுவிப்பாளராகவும் காணப்படுகின்றார். இவர் மூலம் கிடைத்த தொடர்ச்சியான பயிற்சி, இல்ல நிர்வாகத்தின் ஒத்துழைப்பு என்பன சானுயாவை சர்வதேச போட்டி ஒன்றில் வெற்றிபெற வைத்துள்ளது.

புதுடெல்லியில் நடைபெற்ற போட்டியில் இந்தியா, சீனா, இலங்கை,பங்களாதேஷ், நேபாளம், ஜப்பான், ஓமான், பூட்டான்,மலேசியா, குவைத், உஸ்பெகிஸ்தான் என 12 நாடுகள் பங்குபற்றியிருந்தன. இதில் இலங்கை 5 வெள்ளி மற்றும் 11 வெண்கலப் பதக்கங்கள் என 16 பதக்கங்களை வென்றது. இதில் ஒன்று சானுயாவினுடையது. யுத்தம், பொருளாதார நெருக்கடி என எதுவும் இன்றி உலகின் வல்லரசு நாடுகளாகவும், பொருளாதார பலம் பொருந்திய நாடுகளாவும் இருக்கின்ற நாடுகளின் வீராங்கனைகளுடன் யுத்தத்துக்குள் பிறந்து ,எல்லா வகையான நெருக்கடிகளையும் சுமந்து ,சிறுவர் இல்லத்தில் உள்ள சானுயா போட்டியிட்டு வெண்கலப் பதக்கம் வென்றிருக்கிறாள். அதனால் ஏனைய நாடுகளைச் சேர்ந்தோர் பெற்ற தங்கப் பதக்கத்தை விட மிகப்பெரியது சானுயாவின் வெண்கலப்பதக்கம் என்றே கூறவேண்டும்.

சாதிப்பதற்கு நம்பிக்கையும், முயற்சியும், ஒத்துழைப்பும் இருந்தால் போதும்.எந்தத் தடைகளையும் தாண்டிவிடலாம் என்பதற்கு சானுயா சிறந்த உதாரணம் அன்று இந்த மண் சானுயாவின் அம்மாவால் பெருமைப்பட்டது. இன்று சானுயாவால் பெருமைப்படுகிறது. ஒரு வீரத்தாயின் வீர மகள் என்பதனை அவள் நிரூபித்திருக்கிறாள். ஆனாலும் அவள் இன்னும் முன்னோக்கிச் செல்ல நிறையப் படிகள் உண்டு.

**மறக்கடிக்கப்பட்டு போன எம் வீரயுகத்தில் வாழ்ந்த வீரத்தாயினதும், வீரத்தந்தையினதும் மகளாகப் பிறந்து, அவர்களது முகம் அறியாமல் வளர்ந்த சானுயா இன்று விளையாட்டில் வீர மகளாக வலம் வருகிறாள். புலிக்குப் பிறந்தவள் பூனை யாவாளா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பு




அ.நிக்ஸன்

இலங்கைத்தீவில் 2009 இன் பின்னரான சூழலில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி 2022 இல் மோசமான நிலையை எதிர்கொண்டு தற்போது சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகளின் உதவிகள் மூலமும் ஓரளவு மூச்சுவிடக் கூடிய நிலையை எட்டியுள்ளது.

ஆனாலும் இலங்கையின் மொத்த உள்நாட்டுக் கடன் 14 ட்ரில்லியன். இந்தப் பின்னணியில் 2023 ஆம் ஆண்டில் இருந்து 2027 ஆம் ஆண்டுக்குள் சுமார் 17 பில்லியன் டெலர் கடனை ரத்துச் செய்ய இலங்கை எதிர்பார்க்கிறது.

இலங்கை 52 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை சர்வதேச மட்டத்தில் பெற்றிருக்கிறது. அதேநேரம் இலங்கை மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிகளிடம் இருந்தும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்தும் 14 ட்ரில்லியன் டொலரைக் கடனாகப் பெற்றுள்ளது. இந்த நிலையில் 14 ட்ரில்லியன் டொலர் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் நோக்கில் சென்ற 29 ஆம் திகதியில் இருந்து அடுத்த ஐந்து நாள்களுக்கு இலங்கைத்தீவில் உள்ள அனைத்து வங்கிகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிதிச் சந்தையில் ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது. ஆனால் அப்படி எதுவும் நிகழ்ந்துவிடாதென ஜனாதிபதி ரணில், மக்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார். அமைச்சரவையில் கடன் மறுசீரமைப்புக்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் ரணில் தெரிவித்திருக்கிறார். அதேநேரம் நாடாளுமன்ற நிதிக்குழுவிலும் இந்தத் திட்டம் குறித்த யோசனைகளைச் சமர்ப்பித்து விவாதிக்கவுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க கூறுகிறார்.

## உண்மையை வெளியிடத் தயங்கும் சஜித் அணி

ஆனால் வங்கிகளுக்கான விடுமுறையை அறிவித்துள்ள இலங்கை அரசாங்கத்தின் முடிவு, எதிர்காலத்தில் வங்கிகள் இயங்குவதற்குச் சிரமப்படலாம் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது என்று ஒக்ஸ்போர்ட் எக்கொனமிக்ஸின் (Oxford Economics) பொருளியல் நிபுணர் அலெக்ஸ் ஹோம்ஸ் (Alex Holmes) பி.பி.சி.யிடம் தெரிவித்திருக்கிறார். அதேவேளை உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் திட்டத்தை அமுல்படுத்த, குறிப்பிட்ட காலஎல்லையொன்று தேவை எனவும் நாடாளுமன்ற விவாதத்தின்மூலம் இந்தத் திட்டத்தை வெற்றிகொள்ள முடியுமெனவும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்துள்ள மக்களுக்கு, கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் ஊடாகப் பாதிப்பு இல்லை என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டுகிறார். வங்கிகளில் வைப்புச் செய்துள்ள மக்களின் பணத்துக்குப் பாதிப்பு ஏற்படுமென பொருளியல் நிபுணர்கள் சிலரும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் வெளியிடும் கருத்துக்களை ஆளுநர் முற்றாக நிராகரிக்கிறார்.

உத்தேச உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் போது, உள்நாட்டு வங்கி மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்துள்ள பணம் , அதற்காக கிடைக்கின்ற வட்டி வீதங்கள் போன்றவற்றிலும் பாதிப்புகள் அல்லது வட்டிக் குறைப்புகள் ஏற்படாது என்றும் ஆளுநர் உறுதியளிக்கிறார்.

ஆனால் அரச மற்றும் தனியார் ஊழியர் சங்கங்கள் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான தமது சந்தேகங்களை வெளியிட்டுள்ளன. குறிப்பாக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை, அரசாங்கம் திருப்பிச் செலுத்துமா என்று நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

'லங்காதீப' சிங்கள நாளேட்டுக்குக் கருத்து வெளியிட்ட அவர், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கடன்களை அரசாங்கம் திருப்பிச் செலுத்தவேண்டும் என்றும் அதற்கான உத்தரவாதத்தை உயர் நீதிமன்றத்தின் மூலமாக உறுதிப்படுத்தவுள்ளதாகவும் கூறியிருக்கிறார். அரசாங்கத்துக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு வலியுறுத்தி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் தன்னுடன் இணைந்து வேறு பல ஊழியர் சங்கங்களைச் சேர்ந்த ஆறுபேர் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாகவும் வசந்த சமரசிங்க கூறுகிறார்.

## நீதிமன்றத்தை நாடியுள்ள தொழிற்சங்கங்கள்

பொதுமக்கள் வைப்புச் செய்யும் பணத்தை திறைசேரி முறி , திறைசேரி உண்டியல் ஆகியவற்றில் அரசாங்கம் முதலீடு செய்வது வழமை. அந்த முதலீட்டில் இருந்து கிடைக்கும் லாபத்தில் குறிப்பிட்ட லாபம் ஒன்றை திறைசேரி பெறும். அதில் ஒரு சிறிய பகுதியை வட்டி என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு அரசாங்கம் வழங்கும். திறைசேரி வட்டி வீதம் 30, 32 வீதமாகக் குறைவடைந்துள்ளது. குறிப்பாக வைப்பாளர்களுக்குக் கொடுத்த வட்டி வீதம் அண்மைக் காலமாக மிகக் குறைவடைந்து வருகிறது.

ஊழியர் நம்பிக்கை நிதியம் , ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றில் உள்ளநிதியை திறைசேரி ஊடாகப் பெற்ற மத்திய வங்கி , அந்த நிதியை அரசாங்கத்துக்கு கடனாக வழங்கியுள்ளது. இப்படி வழங்கப்பட்ட கடனில் ஒரு பகுதியை பதிவளிப்புச் செய்யலாமா என்றே அரசாங்கம் எதிர்பார்ப்பதாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி கூறுகிறார்.

'நேரடியாகப் பார்க்கும் போது, பொதுமக்கள் வைப்புச் செய்த பணத்தில் ஒரு பகுதியை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற ஒரு பார்வையும் இருக்கின்றது. அதே போன்று, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றில் ஒரு பகுதியை இழக்க வேண்டி ஏற்படும் என்ற பார்வையும் உண்டு. வைப்புச் செய்தவர்களின் பணம் ஒருபோதும் எடுக்கப்படாது என அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கும் எந்தவிதப் பாதிப்பும் வராது எனவும் அரசாங்கம் கூறுகின்றது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இந்த இரண்டிலும் கைவைக்காமல், அரசாங்கம் எப்படிக் கடன் மறுசீரமைப்பைச் செய்ய முடியும் என்று பார்த்தால், வங்கிகளில் செய்யப்படும் வைப்புகளின் ஊடாக வருகின்ற லாபத்தில் ஒரு பகுதியை அரசாங்கம் வெட்டி விடலாம். அதாவது ஒரு பகுதியைத் தருமாறு கேட்கலாம்.' என்று குறிப்பிட்டுள்ள அவர் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு ஏன் நீண்ட விடுமுறை என்றும் கேள்வி எழுப்புகிறார். ஆகவே ஒக்ஸ்போர்ட் எக்கொனமிக்ஸின் பொருளியல் நிபுணர் அலெக்ஸ் ஹோம்ஸ் மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் கருத்தின் பிரகாரம் பொதுமக்களின் அச்சத்தில் குறிப்பாக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் வைப்பிலிடப்பட்டுள்ள ஊழியர்களின் பணத்துக்கும் வட்டிவீதக் குறைப்புகளுக்கும் வாய்ப்பு உள்ளது என்பதை அறிய முடிகிறது.

கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கண்டனத்தை வெளியிட்டாலும் மக்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்ற விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடவில்லை. வெறுமனே அரசியலுக்காக எதிர்ப்பு வெளியிட்டாலும் இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கும் உள்நாட்டுக் கடன்கள் மீளச் செலுத்தப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எதிர்க்கட்சிகளிடம் இருப்பதையே காணமுடிகின்றது.

ஜே.வி.பி.யைத் தவிர ஏனைய அனைத்துச் சிங்கள எதிர்க்கட்சிகளும் குறிப்பாக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, கடன் மறுசீரமைப்புத் தொடர்பான மக்களின் அச்சத்தை விசேடமாக ஊழியர் சங்கங்களின் பயத்தைப் போக்குவதற்கு அல்லது அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு உரிய பதில் வழங்கக் கூடிய முறையில் பொருளியல் சார்ந்த கருத்துகளை வெளியிடவில்லை.

பொருளியல் நிபுணரான நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, இந்தத் திட்டத்தை விமர்சித்தாலும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் இருக்கும் ஊழியர்களின் பணத்துக்கும் அதற்குரிய வட்டி வீதங்களுக்கும் என்ன நடக்கும் என்பதை விபரமாகக் கூறத் தயங்குகிறார்.

ஏனெனில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலிலோ வெற்றி பெற்று ஆட்சியை அமைத்துவிட்டால், இந்தக் கடன்களைத் தமது அரசாங்கம் சுமக்கநேரிடும் என்ற அச்சம் பிரதான எதிர்க்கட்சிகளிடம் தாராளமாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

ஆகவே இந்தப் பின்னணியில் நாடாளுமன்ற நிதிக்குழு விவாதத்தில் இந்தக் கடன் மறுசீரமைப்புத்திட்டம் வெற்றி பெறும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உண்டு என்பதும் தொழிற்சங்கங்கள் எழுப்பும் சந்தேகங்கள் - கேள்விகள் நியாயமானவை எனவும் புரிகிறது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த அரச கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 83,700 மில்லியன் டொலராகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.3 விகிதம் என ரணில், சென்ற புதன்கிழமை கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் சுட்டிக்காட்டி உரையாற்றியிருக்கிறார்.

ஆனால் ரணில் கூறுகின்ற இந்தத் தகவல்களுக்கும் இலங்கை மத்திய வங்கி மற்றும் தொடர்புடைய அமைச்சர்கள் அதிகாரிகள் வெளியிடுகின்ற தகவல்களுக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

நாடாளுமன்ற நிதிக் குழு அறிக்கைகளிலும் தகவல் வேறுபாடுகள் தெரிகின்றன. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்ற தகவல்கள் அரசியல் நோக்கில் மேலும் மிகைப்படுத்தப்பட்டதாகவும் சில தகவல்கள் சரியானதாகவும் இருப்பதை அவதானிக்கமுடியும். ஆனால் பாதிப்பும், பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் சாதாரண மக்கள் என்பது மாத்திரமே நேரடியாகத் தெரியும் உண்மை.



# காற்றுவெளிக் கிராமத்தில் ஒரு கண்ணகியம்மன்

○ நிலாந்தன்

கடந்த வாரம் புங்குடுதீவில் நடந்த கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை நோக்கிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்தார்கள்.1991ஆம் ஆண்டு தீவில் நிகழ்ந்த இடப்பெயர்வுகளின் பின் புங்குடுதீவை நோக்கி இவ்வளவு தொகையான மக்கள் திரண்டு வந்தமை இதுதான் முதல் தடவை.

அண்மைய ஆண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இவ்வாறு வெவ்வேறு நிகழ்வுகளை நோக்கி ஒன்றுதிரளக் காணலாம்.அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூறாவது ஆண்டுக் கொண்டாட்டம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,பரியோவான் கல்லூரி,சில நாள்களுக்கு முன் மெதடிஸ்ட் மகளிர் கல்லூரி போன்றன தமது இருநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியபோது பழைய மாணவர்கள் உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்த நிகழ்வுகளை நோக்கித் திரண்டார்கள்.மிகச் செழிப்பாக பண உதவிகளைச் செய்தார்கள்.சில பாடசாலைகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் வழங்கும் உதவிகள் கோடிக்கணக்கானவை.

கண்ணகி அம்மனுக்கும் அவ்வாறு கோடிக்கணக்காக காசு திரட்டப்பட்டிருக்கிறது.கிடைக்கும் தகவல்களின்படி அந்தக் கோவிலை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 90கோடி ரூபா செலவழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.கோயிலின் ஒவ்வொரு தூணுக்கும் தலா 5லட்சம் ரூபா புலம்பெயர்ந்த ஊர்வாசிகளிடமிருந்து திரட்டப்பட்டிருக்கிறது.மொத்தம் 200 க்கும் குறையாத தூண்கள் அங்கே உண்டு.கும்பாபிஷேகத்திலன்று ஒரு புலம்பெயர்ந்த தமிழர் கிட்டத்தட்ட ஏழரை லட்சம் ரூபா செலவழித்து பக்தர்கள் அனைவருக்கும் இலவசமாக ஐஸ்கிரீம் விநியோகித்தார்.கடந்த மூன்று தசாப்தங்களின் பின் புங்குடுதீவை நோக்கி ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்த ஒரு நிகழ்வு அது.

இலங்கைத்தீவில் மட்டுமல்ல இந்தப்பிராந்தியத்திலேயே ஆளில்லா வீடுகள் அதிகமுடைய ஒரு பிரதேசமாக தீவுப் பகுதியைக் குறிப்பிடலாம்.குறிப்பாக புங்குடுதீவில் உத்தியோகப் பற்றற்ற தகவல்களின்படி 4000க்கும் சற்று அதிகமான மக்கள் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.பேராசிரியர் குகபாலன் 4000க்கும் குறைவான மக்களே அங்கு இருப்பதாகக் கூறுகிறார்.புங்குடுதீவு உட்பட பெரும்பாலான தீவுப்பகுதிகளில் சனத்தொகை குறைவு.ஆளற்ற வீடுகளே அதிகம்.

ஒரு காலம் தேவாலயங்களின் பட்டினம் என்று வர்ணிக்கப்பட்ட ஊர்காவற்றுறை இப்பொழுது கைவிடப்பட்ட வீடுகளின் பட்டினமாக மாறிவிட்டது. அங்கெல்லாம் பழம்பெரும் வீடுகளைச் சூழ்ந்து காடு வளர்ந்து கிடக்கின்றது.அப்படித்தான் நெடுந்தீவிலும். தீவுகளில் சனநடமாட்டம் குறைந்த காரணத்தால் அங்கே குற்றச்செயல்களுக்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.புங்குடுதீவில் வித்யா படுகொலை, நெடுந்தீவில் புலம்பெயர்ந்தவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமை போன்றவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

தீவுகள் இடம்பெயரத் தொடங்கியது போரினால் மட்டும் அல்ல. பொருளாதாரக் காரணங்களுக்காகவும்தான். குடிநீர் ஒரு முக்கியமான பிரச்சினை.அதுதவிர கல்வி, மருத்துவ,தொழிற் தேவைகளுக்காகவும் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தார்கள்.இப்பொழுதும் இடம்பெயர்கிறார்கள்.அயலில் ஆட்கள் இல்லையென்றால் தனித்து விடப்பட்ட வீடுகளுக்கு இயல்பாகவே பயம் தொற்றிக்கொள்ளும்.அது மேலும் இடப்பெயர்வை ஊக்குவிக்கும்.

போர்.இடப்பெயர்வை வாழ்வின் ஒரு பகுதியாக்கியது. போர்க்காலத்தில் மக்கள் தொகையாக இடம்பெயரும் ஒரு போக்கு முதலில் தீவுகளில்தான் தொடங்கியது.முதலில் காரைநகர்.அதன்பின் லைடன்தீவுகள் என்று அழைக்கப்படும் ஊர்காவற்றுறை உள்ளிட்ட தீவுகள்.முடிவில் முழு யாழ்ப்பாணமும் இடம்பெயர்ந்தது.இவ்வாறு ஆளற்றுப்போன தீவுகளைப்பற்றி புங்குடுதீவைச் சேர்ந்த கவிஞர் சு.வில்வரத்தினம் எழுதிய கவிதைத் தொகுப்புக்குப் பெயர் " காற்றுவெளிக் கிராமம்"

தீவுகளில் இருந்து மக்கள் மேலும் வெளியேறுவார்களாக இருந்தால் அங்கு ஒரு மாகாணசபை உறுப்பினரைக்கூட தெரிவு செய்வதற்கு ஆட்கள் இல்லாமற் போய்விடும்.ஒரு காலம் அங்கே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யுமளவுக்கு 36 ஆயிரத்துக்கும் குறையாத வாக்காளர்கள் வசித்தார்கள். எனவே தீவுகளை நோக்கி எப்படி ஆட்களை கொண்டு வரலாம் என்று சிந்திப்பதே தீவுகளில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் முன்னால் உள்ள முக்கியமான பொறுப்பாகும்.ஒரு நாள் திருவிழாக்கள்,சில நாள் கொண்டாட்டங்களை நோக்கி மக்களைத் திரட்டுவதற்குமப்பால்,தமது தாய்க்கிராமத்தை நோக்கி என்றென்றும் மக்கள் திரளக்கூடிய பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் தொடக்க காலத்திலேயே தீவுகளைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் புலம்பெயர்ந்தார்கள். அவர்களில் சிலர் தமது சொந்தத்தீவுகளில் தனிப்பட்ட முறையில் தங்களால் இயன்ற அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள்.எழுவைதீவில் மருத்துவர் நடேசன் கட்டிய மருத்துவமனை;அனலைதீவின் நீட்சியாகவுள்ள புளியந்தீவில், ஒரு வீடமைப்புத் திட்டம்,புங்குடுதீவில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற சில உதாரணங்களை இங்கு சுட்டிக்காட்டலாம்.

வடமாகாணசபை இயங்கத் தொடங்கியபோது, முதலமைச்சரிடம் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் பா.அகிலன் தீவுகளை மையமாகக் கொண்ட ஒரு சுற்றுலாத் திட்டத்தை முன்வைத்தார். ஒவ்வொரு தீவிலும் எது தனித்துவமானதோ,அதை மையமாகக் கொண்டு சுற்றுலா வலையமைப்பு ஒன்றை உருவாக்குவது;ஒவ்வொரு தீவிலும் என்னென்ன பாரம்பரிய உணவு வகைகள் கிடைக்குமோ அவற்றுக்குரிய உணவகங்களை உருவாக்குவது; தீவுகளை இணைக்கும் படகுச்சேவைகளை அல்லது மிதக்கும் விருந்தகங்களை உருவாக்குவது.ஆனால் அந்தத்திட்டத்தை வடமாகாணசபை அதிகாரிகள் ஆர்வத்தோடு அணுகவில்லை என்று தெரிகிறது.

அதுபோலவே சில ஆண்டுகளுக்கு முன் மூன்று தீவுகளை மையமாகக் கொண்டு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் முதலில் சீனாவிடம் கொடுக்கப்பட்டது.பின்னர் இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக அது இந்தியாவுக்கு வழங்கப்பட்டது.நயினாதீவு,நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளிலும் அவ்வாறு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்கள் நிறுவப்படும். ஆனால் இந்தியா அந்தத்திட்டங்களைப் பொறுப்பெடுத்த பின் இலங்கை அரசாங்கம்,நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ரீதியிலான முட்டுக்கட்டைகள் உருவாக்கிவருவதாக ஒரு தகவல்தீவுகளை மையமாகக் கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகளும் விவாதப்பொருட்களாக மாறின.கடலட்டை,மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் தீவுப்பகுதியின் சனக்கவர்ச்சி அதிகரிக்குமா என்று தெரியவில்லை.ஆனால் புவிசார் அரசியல் போட்டிக்குள் தீவுகளும் சிக்குண்டு விட்டன என்பது மட்டும் தெரிகின்றது.

தீவுகளுக்கென்று தனித்துவம் உண்டு.அதில் முக்கியமானது, தீவுகளில் இருந்து எழுச்சிபெற்ற கவர்ச்சிமிகு வணிகப் பாரம்பரியம்.தீவுகளைச் சேர்ந்த் வணிகர்கள் முறைசார் படிப்புக்களுக்கூடாக வந்தவர்கள் அல்லர்.ஆனால் பரம்பரை பரம்பரையாகத் திரட்டப்பட்ட பட்டறிவுக்கூடாக பெரு வணிகர்களாக எழுந்தவர்கள்.தீவுகளுக்கேயான தனித்துவம்மிக்க,நூதனமான அந்தப் பட்டறிவை முறைசார் புலமைப்பரப்புக்குள் உள்வாங்கினால் என்ன? தீவுகளை மையமாகக் கொண்டு வணிகக் கல்லூரிகளை உருவாக்கினால் என்ன? எதைச் செய்தால் தீவுகளை சனக்கவர்ச்சி மிக்கவைகளாக மாற்றலாம்?

ஒவ்வொரு ஆண்டும் நயினாதீவை நோக்கி லட்சக்கணக்கானவர்கள் வருகிறார்கள்.ஆனால் அவர்கள் எல்லாரும் வில்வரத்தினத்தின் காற்று வெளிக் கிராமங்களை கடந்துதான் போகின்றார்கள்.

கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்துக்காக உள்ளூரில் வேலைக்கு ஆட்களைப் பெற்றுக்கொள்வதில் நிறைய தடைகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.கோயிலைத் துப்புரவாக்குவதற்கு உள்ளூரில் ஆட்களைப் பிடிப்பது கஷ்டமாக இருந்ததாம்.தீவுகளில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் நிலைமை அதுதான்.சுவாமி தூக்க ஆளில்லை. சில ஆண்டுகளுக்கு முன் புங்குடுதீவில் வில்வரத்தினத்தின் நினைவு நாளைக் கொண்டாடினார்கள். அம்பலவாணர் அரங்கில் கால்வாசிக்குக் கூட மக்கள் நிரம்பவில்லை.அதிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களே அதிகம்.ஆனால் நீண்ட ஆண்டுகளின் பின் கண்ணகியம்மன் கோயிலை நோக்கி புங்குடுதீவு மீண்டும் திரண்டு வந்திருக்கிறது.

கண்ணகியம்மன் கோவிலுக்கு வேறு ஒரு முக்கியத்துவமும் உண்டு.1971 ஆம் ஆண்டு அங்கு நடந்த சாதி எதிர்ப்புப் போராட்டம் பிரசித்தமானது.ஈழத் தமிழர்கள் மத்தியில் தோன்றிய மிக முக்கியமான சிந்தனையாளர்களில் ஒருவரும் வில்வரத்தினத்தின் ஆசிரியருமான மு.தளையசிங்கம் அந்தப்போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.அங்குள்ள கிணற்றில் சாதிரீதியாகத் தாழ்த்தப்பட்டவர்கள் நீர் அள்ளுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.அதை எதிர்த்துத் தளையசிங்கம் போராடினார்.

ஒருகாலம் சாதிரீதியாக தாழ்த்தப்பட்டவர்களை ஆலயங்களுக்குள் அனுமதிக்க மறுத்தவர்களுக்கும் குடிநீர்க்கிணறுகளைத் தடுத்தவர்களுக்கும் எதிராகப் போராடவேண்டியிருந்தது. ஆனால் இன்றைக்கு அவ்வாறு தடுத்தவர்களின் ஆளில்லா வீடுகளில் சாதி ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களே வந்து குடியிருக்கும் ஒரு நிலை.ஆனால் அந்த வீடுகளை அதில் இப்பொழுது குடியிருப்பவர்களுக்கு சொந்தமாக எழுதிக் கொடுப்பதற்கு வீட்டின் உரிமையாளர்கள் தயாரில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதேசமயம் ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கில் புலம்பெயர்ந்த தமிழர்கள் இருவர் தமது காணிகளை 12 காணியில்லாத குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள்.எனினும், பூதங்காக்கும் காணிகள் பலவற்றை அவ்வாறு கொடுப்பதற்கு மனமில்லாத ஒரு தொகுதியினர் பங்குத் தந்தையிடமும் ஆயர் இல்லத்திடமும் தமது காணி உறுதிகளை கொடுத்து வைத்திருப்பதாக ஒரு புலம்பெயர்ந்த தமிழர் குற்றஞ்சாட்டினார்.

ஒருபுறம் தமிழ்ச் சமூகத்தில் நிலமற்ற வீடற்ற மக்கள். இன்னொரு புறம் புதர் மண்டிக் கிடக்கும் பெரு மாளிகைகள். ஒருபுறம் தேவையோடு தவிக்கும் தாயக மக்கள். இன்னொருபுறம் தாயகத்தைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு காசை என்ன செய்வது என்று தெரியாமல் கொட்டிச் சிந்தும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம். நாட்டைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு நாட்டுக்கு எதையாவது செய்யவேண்டும் என்று புலம்பெயர்ந்த தமிழர்கள் விரும்புகிறார்கள்.ஆனால் அவர்களிடம் உள்ள அளவற்ற செல்வத்தையும் தாயகத்தில் காற்றுவெளிக் கிராமங்களின் தேவைகளையும் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களின்மூலம் இணைப்பதற்கு யார் இருக்கிறார்கள்?

குறிப்பாக, புங்குடுதீவில் குடிநீர் ஒரு பிரச்சினை.ஒரு சிறிய குடிநீர் சுத்திகரிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கிட்டத்தட்ட 40 லட்சம்வரை தேவை என்று கணிப்பிடப்படுகிறது. கண்ணகியம்மனுக்காக செலவழிக்கப்பட்ட தொகையோடு ஒப்பிட்டால் இது மிகச்சிறியது.கோவில் தூண் ஒன்றுக்காக காசு கொடுத்த எட்டுப் பேர் சேர்ந்தால் ஒரு நீர் விநியோகத் திட்டத்தை நிறுவலாம்.

புங்குடுதீவு மருத்துவமனையில் இப்பொழுது மூன்று மருத்துவர்கள் உள்ளனர் அவர்களில் ஒருவர் சிங்களவர்.அவர்தான் பொறுப்பதிகாரி.அண்மைய ஆண்டுகளில் அவ்வாறு சிங்கள மருத்துவர்கள் தீவுகளுக்கு நியமிக்கப்படும் ஒரு நிலைமை.சிங்கள மருத்துவர்கள்தான் அதற்குத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

கணித, விஞ்ஞானப் பிரிவுகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அங்கே குறைவு.பிள்ளைகள் யாழ்ப்பாணம் நகரத்துக்குத்தான் வரவேண்டும்.அல்லைப்பிட்டியில் கிறிஸ்தவ திருச்சபையினரால் கட்டப்பட்ட ஒரு சர்வதேசப் பாடசாலை உண்டு.அது மதம் மாற்றும் நோக்கத்தோடு கட்டப்பட்டது என்று சில இந்துக்கள் குற்றஞ்சாட்டு கிறார்கள்.அப்படியென்றால் கோவில்களைப் புனரமைக்கும் காசில் பள்ளிக்கூடங்களைக் கட்டலாம்.அறப்பணிகளைச் செய்யலாம். நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவலாம்.தீவுகளின் சனக்கவர்ச்சியைக் கூட்டலாம்.

புலம்பெயந்த தமிழர்களையும் தாயகத்தையும் ஒருங்கிணைப்பது அல்லது தேவைகளையும் வளங்களையும் ஒருங்கிணைப்பது என்பது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான்.தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது சனத்திரட்சியை,இனத்திரட்சியைப் பாதுகாப்பதும் பெருக்குவதுந்தான். ஊர்ப்பற்று இருக்க வேண்டும்.அது நல்லது.அதைவிட நல்லது,அந்த ஊர்ப்பற்றானது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இருப்பது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட செயலராக அண்மையில் பதவியேற்ற அ.சிவபாலசுந்தரன், தனியார் வகுப்புகளுக்கு வெள்ளி, ஞாயிறு ஆகிய இருநாள் விடுமுறை என்ற திட்டத்தை அதிரடியாக அறிவித்து அதை நடைமுறைக்கும் கொண்டுவந்துள்ளார். இந்தத் திட்டம் பலரால் வரவேற்கப்பட்டு, வேறு இடங்களிலும் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் சில சலசலப்புகளும் இதுதொடர்பில் எழவே செய்துள்ளன. இந்தநிலையில் இந்தத் திட்டம் பற்றியும், யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான தன் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுடன் இந்த நேர்காணலூடாக அவர் பகிர்ந்து கொள்கின்றார்.

# தனியார் வகுப்புக
# இருநாள் விடுமு
# மாணவர்களின்
# உயருமே தவிர கு

## யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன்

○ நேர்கண்டவர்: இ.தர்ஷன்

**கே: ஜூலை முதலாம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களும் வெள்ளி, ஞாயிறு தினங்களில் மூடப்படவேண்டும் என்ற திட்டத்தை நீங்கள் கொண்டுவந்துள்ளீர்கள். இவ்வாறானதொரு திட்டத்துக்கான எண்ணக்கரு உங்களிடம் எப்படி எழுந்தது?**

ப: இன்று எம் மாவட்டத்திலே உள்ள பதின்ம வயதான மாணவர்கள் பெற்றோரின் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் போதைப்பொருள் பாவனை, சமூகச் சீரழிவுகள் என்பன இங்கு பல்கிப் பெருகுகின்றன. இத்தகையை நிலைக்குக் காரணம் என்ன? எமது பண்பாடு, ஒழுக்கம், சமய விழுமியங்கள் என்பவற்றை இளைய தலைமுறைக்குச் சரிவரக் கையளிக்கத் தவறியமைதான் இதற்கான முதன்மைக் காரணம். எனவே அவற்றை எம் மாணவர்களுக்கு ஊட்டுவதன் மூலமே எதிர்காலச் சந்ததியை ஆரோக்கியமான பாதைக்கு இட்டுச் செல்லலாம். இதற்கு அவர்களுக்கு வீட்டாரின் அன்பும், ஆன்மிக வழிகாட்டலும் அவசியம். இதற்கு இப்போது எம் மாணவருக்கு நேரமிருப்பதில்லை. பரீட்சை மையக் கல்விமுறையால், பாடசாலை முடிந்ததும் ரியூசனுக்கு ஓடவேண்டிய நிலை. பாடசாலை இல்லாத நாட்களிலும் அவர்களுக்கு ஓய்வில்லாமல் ரியூசன் வகுப்புகள்தான். இதனால் கடும் மனஅழுத்தத்தால் அவர்கள் பாதிப்படைகின்றனர். எனவேதான் வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் தனியார் வகுப்புக்களை இல்லாமல் செய்தால் அவர்களுக்கு வீட்டாருடன் அன்பாகப் பழகுவதற்கும், கோயில் - தேவாலயம் முதலான வழிபாட்டுத்தலங்களுக்குச் சென்று ஒழுக்கம், பண்பு என்பவற்றை அறிந்து ஒழுகுவதற்கும் ஏதுவாக இருக்குமென்று நம்பினேன்.

அத்தோடு இவ்வாறான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும்படி ஜனாதிபதிக்கு, யாழ்.மாவட்டப் பிரஜைகள் குழு கடிதமொன்றையும் அனுப்பி இருந்தது. அதுவும் இந்தத் திட்டத்தை நான் நடைமுறைப்படுத்த உந்தியது. அதைவிட இன்னொரு சம்பவமும் இதற்குக்காரணம். நான் அண்மையில் வாரஇறுதி நாளொன்றில் வெளியே சென்று வரும்போது, சுமக்கமுடியாத புத்தகப் பாரத்துடன் மாணவர்கள் வீதியில் செல்வதை அவதானித்தேன். அந்தச் சுமையை அவர்கள் ஓய்வில்லாமல் அடுத்தநாளும் சுமந்தால், எப்படி அவர்களுக்கு கற்கும் மனோநிலை வாய்க்கும்? ஒருநாள் கூட, அந்தப் புத்தகமூடையை வைத்து ஓய்வெடுத்தால் அது அவர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருக்குமே? மனஅழுத்தமும் நீங்கும். அதனால்தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கை எடுத்தேன். இனிமேல் பிள்ளைகளுக்கு இருநாள்கள் புத்தகச்சுமையில் இருந்தும், மன அழுத்தத்தில் இருந்தும் விடுதலை.

அந்த இருநாள்களும் அவர்கள் மனரீதியாக உற்சாகமும், சீர்மையும் பெற்று அடுத்த 5 நாள்களும் முன்னரைக் காட்டிலும் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவார்கள் என்பதும், எப்போதுமே சமூகச் சீரழிவான பாதைக்குச் செல்லமாட்டார்கள் என்பதும் எனது அசைக்கமுடியாத நம்பிக்கை.

**கே: ஆனால் இப்படி இருநாள்கள் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை கொடுத்தால், யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கும். ஏற்கனவே போர், கொரோனா போன்றவற்றால் வீழ்ச்சியடைந்த எமது மாணவரின் கல்வி இன்னும் வீழ்ச்சியடையும் என யாழ்.வணிகர் கழகம் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதே?**

ப: அது தவறான வாதம். 2009 க்கு முன்னர் போரால் எங்கள் பிரதேசம் சிதைந்திருந்தபோது, இப்படி ஓய்வில்லாத தனியார் வகுப்புகள் இல்லாத சூழலில், சூம் செயலி ஊடான வகுப்பை நினைத்தே பார்த்திராத தொழிநுட்ப வசதிகளோ, மின்சாரமோ இல்லாத நிலையில் எமது மாணவர்கள் தேசியரீதியில் முன்னணியில் இருந்தார்கள். அதற்குக் காரணம், பெற்றோரும், ஆசிரியர்களும் அவர்களைச் சீராக வழிநடத்தினார்கள். பாடசாலை ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு போதித்தார்கள். பிள்ளைகள் சுயமாகச் சிந்திக்குமளவுக்கு ஓய்வு நேரம் இருந்தது. பெற்றோர் பிள்ளைகளோடு மனம் விட்டு கதைத்தார்கள், அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொன்னார்கள். பிள்ளைகளும் பெற்றோரின் அரவணைப்பில், அவர்களின் கரம் பற்றி சரியான பாதையில் பயணித்து, கல்வியிலும் சாதனை படைத்தார்கள். என்றைக்கு பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இந்தத் தனியார் வகுப்புகள் புகுந்து அவர்களின் உறவு நிலையில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தினவோ, அப்போதுதான் எங்கள் கல்வி சரிய ஆரம்பித்தது. பிள்ளைகள் ஓய்வேயில்லாமல் பாடசாலை, தனியார் வகுப்புகள் என்று ஓடிக்கொண்டேயிருக்கும் இயந்திரங்களாக மாற்றப்பட்டு விட்டார்கள். ஆனால் ஆசிரியர்கள் தங்கள் வசதிகேற்ப மனநிலை மாற்றத்துக்காக ஓய்வெடுக்கிறார்கள். அப்போதுகூட பிள்ளைகளுக்கு வீட்டுவேலைகள் என்று ஏராளம் செயற்பாடுகளைச் செய்யக் கொடுத்து விட்டே அவர்கள் தாய்லாந்து, மலேசியா என்று வெளி நாடுகளுக்கும் சென்றுவருகிறார்கள்.

எனவே பிள்ளைகள் சுயமாகச் சிந்திக்கவும், பெற்றோரின் அரவணைப்பு குறைந்தபட்சம் இருநாள்களுக்கேனும் கிடைக்கவும் இந்த வெள்ளியும், ஞாயிறும் உதவக்கூடும். இதன்மூலம் அவர்கள் கற்றல் ஆற்றல் அதிகரிக்குமே தவிர, குறையாது. இந்தத்திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு இதனை ஒரு சவாலாகவே நான் சொல்கிறேன். அடுத்து வரும் காலங்களில் எம் மாணவர்களின் மன அழுத்தம் அகன்று, அவர்களின் கல்வித்தரம் இன்னும் மேம்படும், மீண்டும் கல்வியில் முன்னிலை பெறுவார்கள்.

**கே: என்னதான் இருநாள்கள் தனியார் வகுப்புகளுக்குத் தடைவிதித்தாலும், இப்போது 'சூம்' செயலி மூலமான வகுப்புகள், பிரத்தியேக வகுப்புகள் என்பவற்றைக் கட்டுப்படுத்த முடியாதே?**

ப: எந்தவொரு கல்வி நடவடிக்கையையும் கட்டுப்படுவத்துவது எனது நோக்கமல்ல. பிள்ளைகளின் உடல், உள விருத்திக்கான ஒரு கால அவகாசத்தை உண்டாக்குவதே என் நோக்கம். தங்கள் பிள்ளைகளின் நலனில் அக்கிறையுள்ள பெற்றோர் இதைப் புரிந்துகொள்வார்கள். அவர்களுக்குத் தங்கள் பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பது எம்மை விட நன்கு தெரியும். எனவே அவர்களும் வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் 'சூம்' வகுப்பு, பிரத்தியேக வகுப்பு என்று பிள்ளைகளின் நேரத்தை நெருக்கடிக்குள்ளாக்கமாட்டார்கள் என்றே நம்புகிறேன். இந்த இருநாள்களும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மேல் காட்டும் அக்கறைதான் அந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்றக்கூடும். அண்மையில் ஓர் ஆலயத்துக்கு நான் சென்றிருந்த போது சுமார் 50 பிள்ளைகள் பெரியவர்களோடு சேர்ந்து நாதஸ்வரக் கச்சேரியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். இப்படி அவர்களுக்கு பிடித்தமான பொழுதுபோக்குகளை அனுபவிக்கவும் பெற்றோர் இந்த இருநாளும் ஏற்பாடுகளைச் செய்வது பிள்ளைகளின் ஆற்றல்களை இன்னும் அதிகரிக்கும்.

**கே: ஒருபுறம் உங்கள் திட்டத்துக்கு எதிர்ப்புகள் இருந்தாலும், இன்னொரு புறத்தில் உங்கள் திட்டத்துக்கான ஆதரவு பல்மடங்கு பெருகிவருவதைப் பற்றி...?**

ப: யாழ்.மாவட்டத்தை விடவும் வெளிமாவட்டத்தில் உள்ளோர்தான் இந்தத் திட்டத்தின் நற்பயன்களைத் தெளிவாக விளங்கியிருக்கிறார்கள் போல் தெரிகிறது. புத்தளம், மொனராகலை போன்ற மாவட்டங்களில் எமது திட்டத்தை மேற்கோள் காட்டி, அதனைத் தமது பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதைவிட 'சண்டே ரைம்ஸ்' போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஊடகங்கள் கூட , எமது திட்டத்தைச் சிலாகித்து கொண்டாடுகின்றன. வடக்கில் கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களிலும் , கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இன்னும் பல மாவட்டங்களும் இதனைப் பின்பற்றவுள்ளன.

**கே: இளையோரிடம் போதைப்பொருள் பாவனை யாழ்.குடாநாட்டில் முன்னெப்போதுமில்லாத வகையில் பெருகியிருக்கிறது. அதற்கும் இந்தத் தனியார் வகுப்புகளுக்கு இருநாள் விடுமுறை என்னும் திட்டம் தீர்வாக அமையுமா?**

ப: நிச்சயமாக. போதைப்பொருள் பழக்கம் பெருகுவதற்கு மிகமுக்கியமான காரணம், அவை இங்கு அதிகளவில் கடத்தப்பட்டு கொண்டுவரப்படுவது மட்டுமல்ல. மாறாக, பிள்ளைகள் மீதான பெற்றோரின் கண்கரணிப்பு குறைவடைந்தமைதான். முன்னர் எல்லாம் பிள்ளைகள் பாடசாலையால் வந்தவுடன் பெற்றோர் அவர்களிடம் அன்பாக அளவளாவி, ஆதரவாக இருப்பார்கள். அவர்களின் நடத்தையை பெற்றோர் அவதானிக்கவும் முடிந்தது. இன்று அப்படி இல்லையே. பிள்ளைகள் வீட்டில் இருப்பதே குறைவு. பாடசாலை, தனியார் வகுப்புகளுக்குச் சென்றுவரவே அவர்களுக்கு நேரம் போதாமல் இருக்கின்றது. இதனால் பெற்றோரின் அன்பும், அரவணைப்பும், கண்காணிப்பும் குறைகின்றது.

பெற்றோரின் அன்புக்காக ஏங்கும் பிள்ளைகளை போதைப்பொருள்கள் இலகுவாக ஈர்த்துவிடுகின்றன. அவை போதையே இன்பமான உலகமாக அவர்களுக்கு தவறான பாதையைக் காட்டுகின்றன. தத்தம் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுக்கு
# றை திட்டத்தால்
# கல்வித்தரம்
# குறையாது!!

ன்சவால்




மீது அக்கறையும், அன்பும் கொண்ட பெற்றோர் நினைத்தால் தங்கள் பிள்ளைகள் போதையை நாடாமல் செய்ய முடியும். அத்தோடு ஆலயங்கள் பிள்ளைகளுக்கு ஆன்மிகம் , அறம் சார்ந்த கருத்துகளை புகட்டுவதால், அவர்களுக்கு நல்லது, கெட்டதை பிரித்தறியும் பக்குவமும் ஏற்படும். இதனால் அவர்கள் போதைப்பொருளைத் தவிர்க்க முற்படுவர். இதற்கு தனியார் வகுப்புகளுக்கு இருநாள் விடுமுறை என்னும் திட்டம் தீர்வாக அமையலாம்.

பிள்ளைகளுக்கு பணத்தின் பெறுமதியையும் உணரச் செய்யவேண்டும். இப்போதெல்லாம் சிறுபிள்ளைகளின் கைகளில் கூட பெருந்தொகையான பணம் இருக்கின்றது. இதற்கு புலம்

**கடல்நீரைச் சுத்திகரிக்கத் தேவையில்லை: மழைநீரை வீணாக்காமல் இருந்தாலே குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கலாம்**

பெயர் உறவுகள் அனுப்பும் பணமும் ஒரு காரணியாகின்றது. அவர்கள் அன்பின் மிகுதியால் இங்கு அனுப்பும் பணம், இளையோரின் கைகளுக்குச் சென்று, போதைப்பொருள்களை அவர்கள் எவ்வளவு பணம் கொடுத்தேனும் வாங்கும் நிலையை உண்டாக்கி விடுகின்றது. பணத்தின் பெறுமதியும், அதை உழைப்பதற்கான கடினமும் புரிந்தால் இப்படி இள்ளயோர் பணத்தை வீணாக்கமாட்டார்கள்.

அதனால்தான் வெளிநாடுகளில் படிக்கும் போதே, பகுதி நேர வேலை செய்து அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டே இளைஞர்கள் தங்கள் செலவை ஈடுசெய்கிறார்கள். ஆனால் அதேநாடுகளில் வசிக்கும் புலம்பெயரிகள், தங்கள் பிள்ளைகளை இப்படி வேலைக்கு அனுப்பி, அவர்களைக் கற்கவைத்துக்கொண்டு, பணத்தை அனுப்பி , இங்குள்ள இளையோர் கெட்டுக் குட்டிச் சுவராகக் காரணமாகின்றனர். எனவே அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே புலம்பெயர் உறவுகள் பணத்தை அனுப்பவேண்டும்.

கடல் மூலம் இந்தியாவிலிருந்து கேரளக் கஞ்சா கொண்டு வரப்படுவதாக சொல்லப்படுகின்றது. ஆனால் அபாயகரமான போதைப் பொருள்கள் யாழ். மாவட்டத்துக்கு ஏனைய பகுதிகளின் ஊடாகவே - தரை வழியாகவே- கொண்டு வரப்படுவதாக அண்மையில இடம்பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே பொலிஸாரும், போதைப்பொருள் வியாபாரிகள் , பாவனையாளர்களை இனம்கண்டு , உரிய நடவடிக்கைகளை பாரபட்சம் இன்றி எடுத்தால் எமது பகுதியில் போதையற்ற சந்ததியை உருவாக்கமுடியும்.

**கே: இளைஞர்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மையும் போதைப்பொருள் பரவுகைக்கு ஒரு காரணமல்லவா?**

**ப:** ஆனால் உண்மையில் இங்கு வேலைவாய்ப்புகள் இல்லை என்பது தவறான கருத்து. இங்குள்ள வேலைகளை நம் இளைஞர்கள் செய்யத் தயாராயில்லை என்பதே உண்மை.

மரபார்ந்த ரீதியாக தங்கள் பரம்பரைத் தொழில்களைச் செய்வது கௌரவக் குறைச்சலாக எமது இளைய சமுதாயம் நோக்குகின்றது. அதனால் இங்குள்ள பல வேலைகளைச் செய்ய வெளியிடங்களில் இருந்தே ஆட்களைக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. அண்மையில் காங்கேசன் துறைமுக முனையத் திறப்பு விழாவுக்குப் போயிருந்தேன். அங்கு பணிக்கு அமர்த்தப்பட்டவர்களில் ஒருவர் கூட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஏனெனில் அது சார்ந்த கற்கையை இங்குள்ள எவரும் பயிலவில்லை. இவ்வாறுதான் பல வேலைவாய்ப்புகள் இருந்தும் அதனை எம்மவர்கள் கௌரவமற்ற தொழில்களாக அடையாளப்படுத்தி தவிர்க்கின்றனர். அல்லது சில லட்சங்களைச் செலவிட்டுக் கற்பது தமது பொருளாதாரத்துக்கு ஏற்றதல்ல என ஒடுங்கிவிடுகின்றனர். அதனால் அந்த வேலைவாய்ப்புகள் வெளியார் கைகளுக்குப் போகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், இங்கே கௌரவக் குறைச்சல் எனவும், பணம் இல்லை எனவும் செய்ய மறுக்கின்ற தொழில்களைவிடவும் தரம் குறைந்த தொழில்களை பலகோடி ரூபா செலவிட்டு கனடா, லண்டன், பிரான்ஸ் என்று புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று செய்வதும் நம் இளைஞர்கள் தான்.

எனவே இந்த மனோநிலையை விடுத்து, எல்லாத் தொழில் வாய்ப்புகளையும் நாம் சரிவரப் பயன்படுத்தினால் வேலைவாய்ப்பின்மை என்பதை இல்லாமல் செய்வதோடு, போதைப்பழக்கம் முதலான சமூகச் சீர்கேடுகளையும் குறைக்கமுடியும்.

**கே: யாழ்.குடாநாட்டில் உள்ள பெரும் பிரச்சினைகளில் , குடிதண்ணீர்ப் பிரச்சினையும் முதன்மையானது. இதற்காகப் பல திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அவை பற்றிய உங்கள் பார்வை..?**

**ப:** 1960 ஆம் ஆண்டில் இருந்தே இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக்கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் இன்னும் தீர்வு எட்டப்படவில்லை. இப்போது கடல் நீரைச சுத்திகரித்து நன்னீராக்கலாம் என்று பரிசீலிக்கிறார்கள். ஆனால் அப்படிக் கடல் நீரையெல்லாம் குடிதண்ணீராக மாற்றவேண்டிய தேவை இங்கு கிடையாது என்று நம்புகிறேன். எமது பகுதியில் பெய்யும் மழை நீரின் பெரும்பகுதி வீணாகக் கடலுடன் கலக்கின்றது.

அவ்வாறு வீணாகும் மழைநீரை சரியான பொறிமுறை ஊடாகச் சேமித்திருந்தாலே எமது குடிதண்ணீர்ப் பிரச்சினையை எப்போதோ தீர்த்திருக்கமுடியும். சாத்தியமான வழிகளையும், வளங்களை வீணாக்காமல் பயன்படுத்துவது பற்றியும் சரிவர ஆராய்ந்து திட்டங்களை நடைமுறைப்படுத்தினால், குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு சுலபமான தீர்வைக் காணமுடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அத்தகைய திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றேன்.

**கே: யாழ்ப்பாணம் இன்னமும் அரசாங்க உதவித்திட்டங்களையும், மானியங்களையும் எதிர்பார்த்து நிற்கும் மாவட்டமாகவே இருக்கின்றது. தேசியப் பொருளாதாரத்துக்கும் பெரிதாகப் பங்களிப்பதில்லையே. இதனை மாற்றியமைக்கும் திட்டங்கள் ஏதும் கைவசமுண்டா?**

**ப:** இலங்கைக்கே இப்போது வருமானமீட்டித் தரும் துறையாக சுற்றுலாத்துறையே இருக்கின்றது. இங்கே யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைக்கான பல தளங்கள் இருக்கின்றன. புரதான இடங்கள் இருக்கின்றன. இயற்கை அழகு நிறைந்த கடற்கரைகள், தீவுகள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பாரம்பரிய உணவு என்பவெல்லாம் உள்ளன.

அதனைப் பயன்படுத்தி சுற்றுலாத்துறையில் யாழ்ப்பாணத்தை இலங்கையிலேயே முதன்மையான சுற்றுலாப்பிரதேசமாக மாற்றவேண்டும். அதனூடாக தேசியப் பொருளாதாரத்தில் பங்களிப்புச் செய்யும் தவிர்க்கமுடியாத மாவட்டமாக யாழ்ப்பாணத்தை உயர்த்தமுடியும்.

அப்படிச் செய்யும் பட்சத்தில் அரசின் உதவிகள் இன்னும் கிடைக்கும் . அதனைக் கொண்டு நம் உள்ளூர் வளங்களின் உற்பத்திகளையும் பெருக்கி ஏற்றுமதியும் செய்யமுடியும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை முதலீடு செய்ய பல புலம்பெயர் உறவுகள் தயாராக உள்ளனர். போதிய ஆளணி வளமும் இங்குண்டு. வாழைப்பழம், கள்ளைக் கூட இப்போது ஏற்றுமதி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். வருங்காலத்தில் இந்த ஏற்றுமதிகளை அதிகரிக்கவும், புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் புலம்பெயர் உறவுகள் முதலீடு செய்யவேண்டும். எமது பிரதேசத்தில் நாம் புண்ணி புரிந்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இளையோருக்கு உருவாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
02 ஜூலை 2023









O குருமன்காட்டாள்
வன்னிகா

# சமுர்த்தியின் அஸ்தமனம்

# 'அஸ்வெசும'

அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டப் பயனாளிகள் தெரிவு, இலங்கை நாட்டின் ஏழைமக்களை பயங்கரமாக உலுக்கியுள்ளது.

சமுர்த்தித் திட்டத்தில் பயனாளிகளாக , பெரும் பணக்காரர்களே அதிகமாக இருந்திருக்கிறார்கள். அதனால் அந்தத்திட்டத்தை தேசிய மட்டத்திலும் சரி, சர்வதேச மட்டத்திலும் சரி .யாரும் இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐ.எம்.எப் உட்பட இலங்கையை பொருளாதார ரீதியாகப் பிணையெடுக்கும் சர்வதேச அமைப்புகள் மிக நேர்மையான சமூக நலன்புரி நன்மைகள் வழங்கும் வேலைத்திட்டத்தை எதிர்பார்க்கின்றன.

ஏனெனில் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு இடம்பெறும் போது தாழ்ந்த மட்ட வருமானம் பெறுவோர் பாதிக்கப்படுவர். அவ்வாறு பாதிக்கப்படுவோர் யார் என்பதை இனங்காணவும் அவர்களுக்கு பொருத்தமான நிவாரண உதவிகளை வழங்கவும் தாழ்ந்த மட்ட வருமானம் பெறும், எளிதில் பாதிக்கப்படும் மக்களின் விபரம் யாவரும் அறிய, யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வெளிப்படையாக உருவாக்கப்படுவதற்கான நோக்கம் "அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்தில் உள்ளன.



அதாவது சமுர்த்தித் திட்டத்துக்குள் நுழைந்திருந்த "போலி ஏழைகள்" இனங்காணப்பட்டு, "அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் வேலைத் திட்டத்துக்குள் மீண்டும் அந்தப்போலிகள் உள் நுழைய முடியாதபடி மதிப்பீட்டு முறைமைகள் இருந்தன.

எனினும் அதையும் தாண்டி மீண்டும் "அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்துக்குள் "போலி ஏழைகள்" அதாவது வசதி வாய்ப்புகள் நிறைந்த பணக்காரர்கள் உள் நுழைந்துவிட்டனர். உண்மையான பல ஏழைகளை "அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்துக்குள் அதிகாரிகள் உள்வாங்கவில்லை எனும் கொதிப்பு மேலெழுகிறது. கிராம மட்டத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்கள்தான் "சிஸ்ரத்துக்குள்" உள்ளீடு செய்யப்பட்டன.

ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் தகவல் சேகரிப்பில் ஈடுபட்டோர், "தகவல்களை திரிபுபடுத்தினரா?" என்பதையிட்டு முறையான விசாரணை மூலம் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய நடவடிக்கைகளும் அதேநேரம் வழிகாட்டலும் தெளிவுபடுத்தலும் வழங்குவது அவசியம்.

ஏனெனில் பொருளாதார மீட்சியில் வறுமை ஒழிப்பு மிக அவசியமான விடயம். உண்மையில் வறுமைக்குள் வாடுவோர் புறக்கணிக்கப்பட்டால் அங்கு பொருளாதார மீட்சி நடைபெறாது. ஜனநாயகமும் நல்லாட்சியும் நிலைக்காது. சட்டம் ஒழுங்கு சீர்குலையும். சமூகப் பதற்றமும் பெருகும்.

ஆக மொத்தத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், சமூக நலன்புரித் திட்டங்கள் முதலியவற்றில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் தவறிழைத்தல் இருமடங்கு தீமையை விளைவிக்கும்.

முதலில் நாட்டின் வறியமக்கள் பாதிக்கப்படுதல் எனும் தீமை. இரண்டாவது 'இலங்கை அரச இயந்திரம் வறுமை ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதிலும் ஊழல் மோசடி மிக்கதாகவேயுள்ளது' எனும் மிகக் கெட்ட பெயர் சர்வதேச ரீதியில் உருவாகுதல் எனும் தீமை. இது மீண்டும் திரும்ப அதே உத்தியோகத்தர் ஆளணியையே பாதிக்கும்.

வங்குரோத்துப் பொருளாதாரத்தைப் பிணை எடுக்க முற்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற உலகளாவிய பலம்மிக்க நிதி நிறுவனங்களுக்கு நம்பத்தகுந்த புள்ளி விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசரத்தில் அரசாங்கம் உள்ளது. அதனால் அரசாங்கம் மிக அவசரமாக இந்த விடயத்தில் செயற்படுகிறது.

"அஸ்வெசும" பயனாளிகள் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத அனைவரும் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன் மேல்முறையீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

'வெளியிடப்பட்ட பட்டியல் இறுதிப் பட்டியலல்ல' என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். எனினும் கடந்த வாரம் முழுவதும் நாடெங்கும் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். அத்துடன் சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளின் தொழிற்சங்கங்கள் பல்வேறு ஊடக சந்திப்புக்களை நடத்தி சமுர்த்தித் திட்டம் நிறுத்தப்படுவது தொடர்பில் தமது கவலைகளையும் விமர்சனங்களையும் வெளியிட்டனர். சமுர்த்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த தாம், "அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதும் பணக்காரர்கள் இந்தப்புதிய திட்டத்திலும் பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதும் மக்களைக் கோபப்படுத்தியுள்ளன. மக்கள் வீதிகளிலும் பிரதேச செயலகங்களுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பொதுவாக, நம் நாட்டில் சமூக நலத் திட்டத்தில் சேர்க்கப்படும் நபர்கள் பலப்படுத்தப்பட்டு . பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, ஆயுட்காலம் முழுவதும் அந்த நலன்புரித்திட்டத்தின் பலன்களைச் சார்ந்து செயற்படும் முறையே எப்போதும் இருந்து வருகிறது. ஆனால் இந்த"அஸ்வெசும" சமூக நலன்புரி நன்மைகள் திட்டம் அதற்கு மாற்றமான ஒரு திட்டம் என்றே சொல்ல வேண்டும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

"சமுர்த்தி ராஜ்ஜியம்" அஸ்தமிக்கிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீயும் கரடியும்



அது ஒரு அழகிய அடர்ந்த காடு. அந்தக்காட்டில் ஒரு பயங்கரமான கரடி ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அந்தக் கரடி மிகவும் பசியோடு காட்டில் உணவுக்காக அலைந்து திரிந்தது. வெகுநேரம் ஆகியும் அதற்கு உணவு கிடைக்கவில்லை. வழியில் ஒரு மரத்தின் மீது பெரிய தேன்கூடு ஒன்றைக் கண்டது. தேன்கூட்டைக் கண்ட கரடி, தேன்கூட்டைக் கலைத்து அதில் உள்ள தேனைக் குடிக்க நினைத்து அதன் அருகில் சென்றது. கரடி தேன்கூட்டுக்கு அருகில் செல்லும் போது வெளியில் சென்று இருந்த தேனீ ஒன்று கரடி தேன்கூட்டுக்கு அருகில் வருவதை பார்த்து அதன் அருகில் சென்றது. கரடி அந்த தேனியை பார்த்து, "நான் இப்போது இந்த தேன்கூட்டில் உள்ள தேனை சாப்பிடப் போறேன்" என்று சொன்னது. தேனீ, "இது எங்கள் வீடு. இதை ஒன்றும் செய்யாதீங்கள்" என்று கெஞ்சியது. கரடியோ தேனீயைப் பார்த்து, "நீயோ அளவில் சிறியவன். நான் உன்னை விட பலமடங்கு பெரியவன். உன்னால் என்னை ஒன்றும் செய்யஇயலாது" என்று கூறியது. நிலைமையை உணர்ந்த தேனீ கரடியிடம், "எனக்கு ஒரு நிமிடம் அவகாசம் கொடு, நான் என்னுடைய பொருள்களை தேன்கூட்டில் இருந்து எடுத்துச் சென்று விடுகிறேன் " என்று கரடியிடம் கூறியது. கரடியும் இதற்கு ஒத்துக்கொண்டது. தேன் கூட்டுக்குச் சென்ற அந்த ஒற்றை தேனீ, தேன்கூட்டில் இருந்த எல்லாத்தேனீக்களிடம் நடந்த சம்பவத்தைக்கூறியது எல்லாத் தேனீக்களும் உடனே கூட்டிலிருந்து வெளியே வந்தன.


கூட்டிலிருந்து வெளியே வந்த எல்லாத்தேனீக்களும் உடனே கரடியை கொட்டத்தொடங்கின. கரடிக்கு தேனீக்கள் கொட்டியதால் வலியால் துடித்தது. மேலும் வலி தாங்க முடியாத கரடி ஓடத்தொடங்கியது. தேனீக்களும் கரடியை விடாமல் மிகவும் வேகமாகத் தொடர்ந்து சென்றன. போராட்டத்தின் முடிவில் வேறு வழியில்லாமல் தேனீக்களிடமிருந்து தப்பிக்க கரடி காட்டில் இருந்த ஒரு ஆற்றின் நடுவில் குதித்தது.

**நீதி: உருவத்தை வைத்து யாரையும் அலட்சியமாக எண்ணக் கூடாது!**

## ஆங்கிலம் கற்போம்



| | |
|---|---|
| Put it | அதை போடுங்கள் |
| Put here | இங்கே போடுங்கள் |
| Don't take | எடுக்க வேண்டாம் |
| Take it | அதை எடுங்கள் |
| Ask him | அவரிடம் கேளுங்கள் |
| Do it now | அதை இப்போ செய் |
| Get out | வெளியே போ |
| Come in | உள்ளே வா |
| Give me | என்னிடம் கொடு |
| Like us | எங்களைப் போல |
| Don't run | ஓட வேண்டாம் |
| Don't Jump | குதிக்க வேண்டாம் |
| Keep it | அதை வையுங்கள் |
| Work hard | கடினமாக உழை |
| Do well | நன்றாக செய் |
| Well said | நன்றாக சொன்னாய் |
| Don't worry | கவலைப்படாதே |
| Definitely | நிச்சயமாக |
| Hurry up | சீக்கிரம் |
| Do something | ஏதாவது செய் |
| Let's go | போவோம் |
| No thanks | வேண்டாம் நன்றி |
| Anyway | எப்படியும் |
| No reason | காரணம் இல்லை |









**த.மதுசன்**
தரம் - 11A
யா/காரைநகர் இந்துக்கல்லூரி

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் கிழக்கிலங்கை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப் பளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கட் டிச்சோலை எனும் இடத்தில் அமைந்துள்ளது.

கொக்கட்டி மரங்கள் செறிந்த சோலையாக இருந்த இடமாதலால் கொக்கட்டிச் சோலை எனும் பெயர் தோன்றலாயிற்று.

கொக்கட்டி மரத்தின் கீழ் சுயம்பு வடிவமாக சிவன் எழுந்தருளியிருந்தமையினாலும், கொக்கட்டிச் சோலையில் தலம் அமைந்தமையினாலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆல யம் என இந்த ஆலயம் பெயர் கொள்ளலாயிற்று.

காடுகளை அழித்துக் கொண்டிருக்கும் அவ்வே ளையில் வேடர்குல திடகன் என்பவன் கொக்கட்டி மரப்பொந்தொன்றில் தேன் இருப்பதைக் கண்டு கொக்கட்டி மரத்தை வெட்டியவேளை அதிலிருந்து குருதி பெருக, அதைக் கண்ட அவன் தனது உடையினால் வெட்டு வாயைக் கட்டிவிட்டு உலக நாச்சியிடம் செய்தியைக் கூறினான். உலக நாச் சியும் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தபோது மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது.

உலக நாச்சியார் அதனைச் சிவலிங்கம் என உணர்ந்து ஆலயம் அமைத்ததோடு வட நாட்டு கொல்லடத்திலிருந்து பட்டர் மூவரை வரவழைத் துப் பூசை நிகழ்தினாள் என ஆலய வரலாறு கூறப்படு கின்றது.

இவ்வாலயம் குளக்கோட்டன், கலிங்கமாகன், விமலதர்மசூரியன், விக்கிரம இராஜசிங்கன் முத லிய மன்னர்களால் பரிபாலிக்கப்பெற்ற ஆலய மென்பதையும் வரலாற்று ஏடுகளில் அறியமுடி கின்றது.

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆவணி மாதத்தில் வருகின்ற வளர் பிரதமையும், உத்தர நட்சத்திரமும் கூடிய திருநாளில் கொடியேற்றத்து டன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் திரு விழாக்கள் நடத்தப்படும்.




**பு. ஜீவேந்திரன்**
தரம் - 08
யாழ். இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஈழக்கனவை அழித்த கூலிப்படைகள்!

**ரஷ்யா-உக்ரைன் ஆக்கிரமிப்பில் பயன்படுத்திய கூலிப்படைகளைப் போன்றே ஈழப்போரின் இறுதியில் கூலிப்படைகளால் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.**




○ சிவா செல்லையா

ரஷ்யா - உக்ரைன் ஆக்கிரமிப்பில் பயன்படுத்திய கூலிப்படைகளே பல இனப்படுகொலைகளை ஆபிரிக்காக் கண்டத்திலும், மேற்காசியாவிலும் மேற்கொண்டன. இவ்வாறான கூலிப்படைகள் இறுதிக்கட்ட ஈழப்போரிலும் உலக வல்லரசுகளாலும் பிராந்திய வல்லரசுகளாலும் தமிழீழத்தில் தரையிறக்கப்பட்டன. இவற்றின் முகவர்களாக பல தேச விரோதிகள் செயற்பட்டனர். இதனுள் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் கட்டளைப் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவல் ஏற்பட்டது. 10 பேர் கொண்ட கட்டளைக் குழுவாக இவர்கள் செயற்பட்டனர். பெருமளவான பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாயினர்.

தற்போது ரஷ்யாவில் நிகழ்ந்த முரண்படை நகர்வுபோல் ஒரு முரண்படை நகர்வு வன்னியில் நிகழ்ந்தது. இதன் விளைவாக எமது விடுதலைப்போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டது.

இவ்வாறு காட்டிக்கொடுத்தோர் இன்று புலம்பெயர் தேசங்களில் இலங்கை அரசுடனும் இலங்கை இராணுவத்துடனும் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இணைந்து செயற்படுகின்றனர். தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டமை போன்றே தமிழர்களின் அரசியல் போராட்டமும் மழுங்கடிக்கப்பட்டு தற்போது பொருளாதாரச் சீர்குலைவை இவர்கள் சிறப்பான ஆயுதமாக்க முனைகின்றனர். 2009 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரை எமது அரசியல் செயற்பாடுகள் மந்தமடைவதற்கு இவர்களே முன்னின்று உழைப்பவர்கள். எனவே எமது இளைய சமூகம் மாற்று அரசியல் கருத்துருவாக்கத்தை பிரசாரப்படுத்த வேண்டிய கட்டத்தில் உள்ளது.

ரஷ்யா - உக்ரைன் ஆக்கிரமிப்பில் பயன்படுத்திய கூலிப்படைகளைப் போன்றே ஈழப்போரின் இறுதியில் கூலிப்படைகளால் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. இந்த உண்மையினை ஆண்டுகள் பல கடந்த நிலையிலும் வெளிப்படுத்தவேண்டிய தேவை உள்ளது.

எமது மக்களில் காணாமல் ஆக்கப்பட்டோரில் பெருமளவானோர் இவ்வாறான கூலிப்படையினரால் காட்டிக்கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டனர். எமது போராட்டத்தை மழுங்கடிக்க, சர்வதேச ரீதியில் பிரசாரத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஈடுபட்டமை அவர்களது செயற்பாட்டு அறிக்கைகளாக ஆதாரமாக்கப்பட்டுள்ளது.

கூலிப்படைகளை வைத்து, விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதும் மடைமாற்றுவதும் ஓர் இராணுவ உத்தியாக கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக கையாளப்பட்டு வந்தமை என்பது கண்கூடு. ஆனால் அதே கூலிப்படை ஓர் உலக வல்லரசினை ஆட்டம்காணவைத்த தன்மையினை இன்று ரஷ்யாவில் காண்கின்றோம்.

ரஷ்யாவில் இன்றைய காலத்தில் நிகழ்ந்தவை அன்று வன்னியில் நிகழ்ந்த அவலத்தின் காரணத்தை தமிழ் மக்களுக்கு ஆதாரத்துடன் முன்வைக்கின்றன. உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக்கூறுதல், நல்லிணக்கம் என்பனவற்றை செவ்வனே மேற்கொள்ள கடந்தகால நிகழ்வு களை நிகழ்கால நிகழ்வுகளுடன் ஒப்புநோக்கி உய்த்தறிதல் மிகவும் அவசியமாகும். ■

○ இயல்வாணன்

ஒரு ஊடகவியலாளராக, எழுத்தாளராக, விமர்சகராக, பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்தியவராக, பல ஆளுமைகளை சமூகத்துக்கு அறிமுகப்படுத்துபவராக நதி போல ஓடிக்கொண்டிருக்கும் ஒரு மனிதருக்கு கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தால் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல் விருது வழங்கப்பட்டுள்ளது. அவர்தான் லெட்சுமணன் முருகபூபதி!

1951 ஜுலை 13 இல் நீர்கொழும்பில் பிறந்த முருகபூபதி 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நீர்கொழும்பு விவேகானந்தக் கல்லூரியில் (இன்றைய நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) முதலாவது மாணவராக இணைந்து கொண்ட பெருமைக்குரியவர். பின்னர் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், நீர்கொழும்பு அல்ஹிலால் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

1972 ஆம் ஆண்டு வீரகேசரியின் பிரதேச நிருபராகப் பணிபுரியத் தொடங்கிய இவர் ஒப்புநோக்குநராகவும், உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இடதுசாரியச் சிந்தனை கொண்ட இவர் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் சோவியத் ஒன்றியத்தில் நடைபெற்ற மாணவர்- இளைஞர் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டு, அதில் பங்குபற்றினார். அங்கு சென்று வந்த பயண அனுபவங்களை வீரகேசரியில் 15 வாரங்கள் தொடராக எழுதினார். இந்தத் தொடர் இலக்கிய, பத்திரிகை உலகில் அவரைப் பிரபலப்படுத்தியது. அது 'சமதர்மப் பூங்காவில்' (1990) என நூலாக வெளிவந்துள்ளது.

இடதுசாரிய அமைப்புகளுடனும், தமிழ் இயக்கங்களுடனும் பத்திரிகையாளராக இவருக்குத் தொடர்பு இருந்தது. அத்துடன் வீரகேசரிப் பத்திரிகையில் இவர் வெளியிட்ட ஒரு செய்தி காரணமாக விசாரணை மற்றும் நெருக்குவாரங்களை எதிர்கொண்டார். இந்த நெருக்கடிகள் காரணமாக 1987 ஜனவரியில் வீரகேசரியில் இருந்து விலகிய இவர் அடுத்த மாதமே அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தார். இவற்றைச் சொல்ல மறந்த கதைகள் நூலில் பதிவு செய்துள்ளார்.

சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ள முருகபூபதி கட்டுரைகள், பத்திகள், உருவகக் கதைகள், பயண இலக்கியம், நேர்காணல் எனப் பலதுறைகளிலும் எழுதியுள்ளார். அத்துடன் பல தொகுப்பு[illegible]யும் இவர் செய்துள்ளார். 1972 ஆம் ஆண்டில் மல்லி[illegible]யில் எழுதிய 'கனவுகள் ஆயிரம்' சிறுகதை மூலம் இவர் இலக்கிய உலகில் பிரவேசித்தார்.

[illegible]கரையை அண்மித்து வாழ்ந்த முருகபூபதி அந்த மக்க[illegible]பாடுகளைத் தனது முதலாவது கதையிலும், ஏனைய பல [illegible]களிலும் வெளிக்கொணடு வந்துள்ளார். மல்லிகை, பூரணி, [illegible] மாணிக்கம், தேசாபிமானி, புதுயுகம், வீரகேசரி ஆகிய [illegible]றில் ஆரம்ப காலத்தில் இவரது சிறுகதைகளும் கட்டுரைகளும் விமர்சனங்களும் வெளிவந்துள்ளன. ரஸஞானி, ரிஷ்ய சிருங்கர் முதலான புனைபெயர்களில் இவற்றை எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளின் முதலாவது தொகுதி 'சுமையின் பங்காளிகள் ' 1975 இல் வெளியானதுடன் தேசிய சாகித்திய மண்டல விருதினையும் பெற்றுக்கொண்டது.


இந்நூலின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. சமாந்தரங்கள்(1989), வெளிச்சம்(1998), எங்கள் தேசம்(2000), கங்கைமகள்(2005), நினைவுக்கோலங்கள்(2006), மதக செவனலி (சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கதைகள் 2012), கதைத்தொகுப்பின் கதை (2021) ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

## 13 முன்றில்

பறவைகள் (2001 தேசிய சாகித்திய விருது பெற்றது) என்ற நாவலையும், பாட்டி சொன்ன கதைகள் (1997) என்ற உருவக இலக்கிய நூலையும் இவர் படைத்தளித்துள்ளார். கடிதங்கள் (2001) என்ற கடித இலக்கிய நூலும், இவரால் மேற்கொள்ளப்பட்ட பதினொரு நேர்காணல்களின் தொகுப்பான சந்திப்பு(1998) நூலும் இவரது பரந்துபட்ட தொடர்பையும், ஆளுமையையும் வெளிப்படுத்துகின்றன.

நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள்(1995), இலக்கியமடல்(2000), மல்லிகை ஜீவா நினைவுகள்(2001), அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகமான எம்மவர்(2003), கவிஞர் அம்பி வாழ்வும் பணியும் (2004), ராஜ ஸ்ரீகாந்தன் நினைவுகள் (2005), உள்ளும் புறமும்(2011), சொல்ல மறந்த கதைகள்(2014), சொல்ல வேண்டிய கதைகள்(2017), சொல்லத்தவறிய கதைகள்(2019), இலங்கையில் பாரதி(2019), நடந்தாய் வாழி களனிகங்கை(2021), யாதுமாகி(2022), வாழும் வரலாறு மல்லிகை ஜீவா(2022), பாரதி தரிசனம்(2022) ஆகிய கட்டுரை நூல்கள் இவரது வாழ்நிலை அனுபவங்களையும், ஆழ்ந்தகன்ற பார்வை வீச்சையும், சமூகம் நோக்கிய கவனிப்பினையும் புலப்படுத்தும் வகையில் வெளிவந்துள்ளன.

நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் செயலாளர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசியசபை உறுப்பினர், அவுஸ்திரேலிய கலை இலக்கியச் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர் எனப் பல்வேறு அமைப்புகளுடனும் இவர் இணைந்து பணியாற்றியுள்ளார். இவரும், தி.ஞானசேகரனும் பிரதம அமைப்பாளர்களாக இருந்து சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை கொழும்பில் 2011 இல் திறம்பட நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.


லெட்சுமணன் முருகபூபதி

அவுஸ்திரேலியாவில் 1988 இல் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட இவர் தாய், தந்தையரை இழந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உதவி வழங்கி, அவர்களை நன்னிலைப்படுத்தும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளார். 2009 முள்ளிவாய்க்கால் அவலத்தைத் தொடர்ந்து இவரது கவனம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பிள்ளைகளைத் தத்தெடுத்து பல மில்லியன் ரூபா உதவியளிப்பதில் திரும்பியுள்ளது. வருடாந்தம் இவராலும், நண்பர்களாலும் பெருமளவு மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இவரால் முதலில் தத்தெடுத்து உதவியளிக்கப்பட்ட மாணவி ஒரு பாடசாலையில் அதிபராக இருப்பதை நேர்காணல் ஒன்றில் பதிவுசெய்துள்ளார்.

இவரது சேவையையும், வாழ்வையும் கௌரவிக்கும் வகையில் எழுத்தாளர் கிருஸ்ணமூர்த்தி, கலைஞர் மூர்த்தி ஆகியோர் இணைந்து ரஸஞானி என்ற ஆவணப்படத்தைத் தயாரித்துள்ளனர். ஜீவநதி சஞ்சிகையும் சிறப்பிதழ் வெளியிட்டுக் கௌரவித்துள்ளது. ஞானம், மல்லிகை, மண் முதலான சஞ்சிகைகளும் அட்டைப்பட அதிதியாக கௌரவித்துள்ளன.

அவுஸ்திரேலிய தினத்தில் சிறந்த பிரஜைக்கான விருது (2002), அவுஸ்திரேலிய பல்தேசிய கலாசார ஆணையகத்தின் விருது (2012), அக்கினிக்குஞ்சு இதழ் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது(2018), இயல்விருது(2022) உட்படப் பல விருது களும், கௌரவங்களும் இவரது எழுத்தூழியத்துக்காகக் கிடைத்துள்ளன. 72 வயதிலும் உற்சாகத்தோடு தொடர்ந்து எழுதியும், செயற்பட்டும் வரும் இவர் ஒரு ஊடகவியலாளர் என்ற நேர்த்தியுடன் சக படைப்பாளிகள், சமூக முக்கியத்துவம் வாய்ந்தவர்களை அறிமுகப்படுத்தி, கௌரவிக்கும் வகையில் தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்து வருகிறார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org